சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை

# இந்து சமய அறநிலையத் துறை

## மானியக்கோரிக்கை எண்: 47

கொள்கை விளக்கக் குறிப்பு

**2013–2014**

**முகவுரை**

''ஆலயம் தொழுவது சாலவும் நன்று''

''கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்''

என்பன, திருக்கோயில் வழிபாடு, தமிழர் வாழ்வியலோடும், கலாச்சாரத்தோடும் இரண்டறக் கலந்தது என்பதை மெய்ப்பிக்கும் அமுத மொழிகளாகும். கோயில் தழுவிய குடிகளும், குடி தழுவிய நல்லாட்சியும் சிறந்திலங்கும் நம் தமிழ்நாட்டில் 1300 ஆண்டுகளுக்கு முன்னரே எத்தனை எத்தனை வகைமையான கோயில்கள் இருந்தன என்பதைத் திருநாவுக்கரசு சுவாமிகளின் ஒரு திருத்தாண்டகம் அழகுறப் பறை சாற்றுகிறது.

பெருக்காறு சடைக்கு அணிந்த பெம்மான் சேரும்
பெருங்கோயில் எழுபதினோடு எட்டும் மற்றும்
கரக்கோயில், கடிபொழில் சூழ் ஞாழல் கோயில்
கருப்பறியல் பொருப்பு அனைய கொகுடிக்கோயில்
இருக்கு ஓதி மறையவர்கள் வழிபட்டு ஏத்தும்
இளங்கோயில், மணிக்கோயில், ஆலக்கோயில்,
திருக்கோயில் சிவன்உறையும் கோயில் சூழ்ந்து
தாழ்ந்து இறைஞ்சத் தீவினைகள் தீரும் அன்றே

**2.** அன்று சேரனும், சோழனும், பாண்டியனும், பல்லவனும், பாதுகாத்துப் புரந்த கோயில்களை இன்று தமிழ்நாடு அரசும், அதன் கீழ் இயங்கும் நமது இந்து சமய அறநிலையத் துறையும் கண்ணின் கருமணிகளாகப் போற்றிப் பாதுகாத்துப் புரந்து வருவதை உலகம் அறியும்.

**3.** பாடல்பெற்ற சிவத்தலங்கள், ஆழ்வார்களால் மங்களாசாசனம் பெற்ற வைணவத் திருப்பதிகள், திருப்புகழ் பெற்ற முருகப்பெருமான் படைவீடுகள், புகழ்பெற்ற அம்மன் திருக்கோயில்கள், கிராமக்கோயில்கள் என எண்ணிலடங்கா கலைச் சின்னங்களாக நாடெங்கும் பரவி உள்ளன. இத்திருக்கோயில்களுக்கு அசையும் சொத்துக்களையும், அசையாச் சொத்துக்களையும் மன்னர்கள் முதல் சாதாரண மக்கள் வரை சாசனம் செய்துள்ளனர். திருக்கோயில்களைப் பராமரிப்பதும், திருக்கோயில் சொத்துக்களை பாதுகாப்பதும் திருக்கோயில்களுக்கு வருகை தந்து வழிபடும் பக்தர்களுக்கு தேவையான வசதிகளைச் செய்தளிப்பதும் இந்து சமய அறநிலையத் துறையின் கடமையாகும்.

**நிருவாகம்**

**4.** இந்து சமய திருக்கோயில்கள், திருமடங்கள் அறக்கட்டளைகள் ஆகியவற்றின் நிருவாக மேலாண்மை மிகுந்த கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டிய அவசியத்தை உணர்ந்து **1863–**ஆம் ஆண்டு முதல் **1956–**ஆம் ஆண்டு வரை இயற்றப்பட்ட பல்வேறு சட்டங்களை ஆராய்ந்து அவற்றின் குறைகளைக் களைந்து **1959–**ஆம் ஆண்டு தமிழ்நாடு, இந்து சமய மற்றும்

அறநிலைக்கொடைகள் சட்டம் அரசால் இயற்றப்பட்டது. இச்சட்டத்தில் பொது நலன் மற்றும் இந்து சமய நிறுவனங்களின் நிருவாக நலன் கருதி தேவையின்போது மிகுந்த கவனத்துடன் சட்டத்திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

5. இந்து சமய நிறுவனங்களை செம்மையுடன் நிருவகித்திட மேற்கொள்ள வேண்டிய பல்வேறு வழிவகைகளையும் அவற்றைச் செயல்படுத்திட தேவையான அதிகாரங்களையும் கடமைகளையும் இந்து சமய அறநிலையத் துறையின் ஆணையர் மற்றும் சார்நிலை அலுவலர்களுக்கு இச்சட்டம் வரையறை செய்துள்ளது. மேலும், சமண சமய நிறுவனங்கள் மற்றும் அறக்கட்டளைகளுக்கு இச்சட்டத்தை விரிவுப்படுத்தவும் இச்சட்டம் அரசுக்கு அதிகாரம் அளித்துள்ளது.

**இந்து சமய நிறுவனங்கள்**

6. இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டில் 38,529 இந்து சமய மற்றும் சமண சமய நிறுவனங்கள் உள்ளன. இதன் விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | திருக்கோயில்கள் | 36,488 |
| 2. | திருமடங்கள் | 56 |
| 3. | திருமடத்துடன் இணைந்த திருக்கோயில்கள் | 58 |
| 4. | குறிப்பிட்ட அறக்கட்டளைகள் | 1,721 |
| 5. | அறக்கட்டளைகள் | 189 |
| 6. | சமணத் திருக்கோயில்கள் | 17 |
| | மொத்தம் | 38,529 |

## இந்து சமய நிறுவனங்களின் வகைப்பாடு

7. இந்து சமய நிறுவனங்கள் ஆண்டு வருமான அடிப்படையில் பட்டியலைச் சாராத நிறுவனங்கள் மற்றும் பட்டியலைச் சார்ந்த நிறுவனங்கள் என இரு வகைப்படுத்தப்பட்டுள்ளன. இதன் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | சமய நிறுவனங்கள் வகைப்பாடு | நிறுவனத்தின் ஆண்டு வருமானம் | நிறுவனங்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | பட்டியலைச் சாராத நிறுவனங்கள். சட்டப்பிரிவு–49 (1) | ரூ. 10,000/–க்கு குறைவாக ஆண்டு வருமானம் உள்ளவை | 34,336 |
| 2. | பட்டியலைச் சார்ந்த நிறுவனங்கள். சட்டப்பிரிவு–46 (i) | ரூ. 10,000/–லிருந்து ரூ. 2,00,000/–க்கும் குறைவாக ஆண்டு வருமானம் உள்ளவை | 3,402 |
| 3. | சட்டப்பிரிவு–46(ii) | ரூ. 2,00,000/–லிருந்து ரூ. 10,00,000/–க்கும் குறைவாக ஆண்டு வருமானம் உள்ளவை. | 557 |
| 4. | சட்டப்பிரிவு–46(iii) | ரூ.10,00,000/–மும் அதற்கு மேலும் ஆண்டு வருமானம் உள்ளவை. | 234 |

| | | | |
|---|---|---|---|
| | | மொத்தம் | 38,529 |

நிருவாக அமைப்பு

8. இந்து சமய நிறுவனங்களின் நிருவாகத்தை முறையாகப் பராமரிக்கவும், பாதுகாக்கவும், மேற்பார்வையிடவும் 1959–ஆம் ஆண்டு தமிழ்நாடு, இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் சட்டத்தின் (திருத்தச் சட்டம் 39/1996) கீழ் இந்து சமய அறநிலையத்துறையின் நிருவாக தலைமைப் பொறுப்பில் ஆணையர் செயல்படுகிறார்.

9. இந்து சமய அறநிலையத் துறையின் பொது நிருவாகம், பணியாளரமைப்பு, சமய நிறுவனங்களின் அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் மேலாண்மை, திருப்பணி, வழக்குகள், தணிக்கை போன்ற பல்வேறு செயல்பாடுகளில் ஆணையருக்கு உதவியாக தலைமையிடத்தில் கீழ்க்காணும் அலுவலர்கள் பணிபுரிகின்றனர்.

| பதவி | பணியிடங்கள் |
|---|---|
| கூடுதல் ஆணையர் (பொது) | 1 |
| கூடுதல் ஆணையர் (விசாரணை) | 1 |
| இணை ஆணையர்(தலைமையிடம்) | 1 |
| இணை ஆணையர் (திருப்பணி) | 1 |
| இணை ஆணையர் (சட்ட சேர்மம்) | 1 |
| இணை ஆணையர் (கல்வி மற்றும் தொண்டு நிறுவனம்) | 1 |

| | |
|---|---|
| இணை ஆணையர் (சரிபார்ப்பு) தலைமையிடம் | 1 |
| உதவி ஆணையர் (சட்ட சேர்மம்) | 1 |
| உதவி ஆணையர், கிராமக்கோயில் பூசாரிகள் நலவாரியம் | 1 |

இத்துறைத் தலைமையிடத்தில் பணிபுரியும் மாற்றுத்துறை அலுவலர்களின் விவரம் வருமாறு:

| பதவி | பணியிடங்கள் | துறை |
|---|---|---|
| தனி அலுவலர் (திருக்கோயில் நிலங்கள்) (மாவட்ட வருவாய் அலுவலர் நிலை) | 2 | வருவாய்த் துறை |
| கண்காணிப்புப் பொறியாளர் | 1 | நெடுஞ்சாலைத் துறை / பொதுப்பணித்துறை |
| செயற்பொறியாளர் | 1 | நெடுஞ்சாலைத் துறை / பொதுப்பணித்துறை |
| உதவிக் கோட்டப் பொறியாளர் | 1 | நெடுஞ்சாலைத் துறை / பொதுப்பணித்துறை |
| உதவிப் பொறியாளர் / தொழில்நுட்ப உதவியாளர் | 1 | நெடுஞ்சாலைத் துறை / பொதுப்பணித்துறை |
| உதவிப் பொறியாளர் (மின்) | 1 | மின்துறை |
| முதுநிலை வரைதொழில் அலுவலர் | 1 | நெடுஞ்சாலைத் துறை / பொதுப்பணித்துறை |
| இளநிலை வரைவாளர் | 2 | நெடுஞ்சாலைத் துறை / |

| | | |
|---|---|---|
| | | பொதுப்பணித்துறை |
| வரைவாளர் | 2 | நெடுஞ்சாலைத் துறை / பொதுப்பணித்துறை |
| முதுநிலை கணக்கு அலுவலர் | 1 | கருவூலக் கணக்குத் துறை |
| உதவி கணக்கு அலுவலர் | 1 | கருவூலக் கணக்குத் துறை |
| தலைமைத் தணிக்கை அலுவலர் (துணைச் செயலாளர் நிலை) | 1 | நிதித்துறை |

**மண்டல மற்றும் மாவட்ட நிருவாகம்**

10. மாநில அளவில் 11 மண்டலங்களையும் மாவட்ட அளவில் 28 கோட்டங்களையும் உள்ளடக்கி ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஓர் இணை ஆணையரும் ஒவ்வொரு கோட்டத்திற்கும் ஓர் உதவி ஆணையரும் நியமிக்கப்பட்டு இந்து சமய நிறுவனங்களின் நிருவாகம் கண்காணிக்கப்படுகிறது. இதன் விவரம் பின்வருமாறு:

**இணை ஆணையர்கள் மற்றும் உதவி ஆணையர்கள் ஆளுகை எல்லை**

| வ. எண் | மண்டலம் | கோட்டம் | | ஆளுகை எல்லை |
|---|---|---|---|---|
| 1. | இணை ஆணையர் சென்னை | 1. | உதவி ஆணையர் சென்னை | சென்னை மாவட்டம் |
| 2. | இணை ஆணையர் வேலூர் | 2. | உதவி ஆணையர் திருவள்ளூர் | திருவள்ளூர் மாவட்டம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 3. | உதவி ஆணையர் காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் மாவட்டம் |
| | | 4. | உதவி ஆணையர் வேலூர் | வேலூர் மாவட்டம் |
| 3. | இணை ஆணையர் சேலம் | 5. | உதவி ஆணையர் தருமபுரி | தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள் |
| | | 6. | உதவி ஆணையர் சேலம் | சேலம் மாவட்டம் |
| | | 7. | உதவி ஆணையர் நாமக்கல் | நாமக்கல் மாவட்டம் |
| 4. | இணை ஆணையர் கோயம்புத்தூர் | 8. | உதவி ஆணையர் கோயம்புத்தூர் | கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங்கள் |
| | | 9. | உதவி ஆணையர் ஈரோடு | ஈரோடு மாவட்டம் |
| | | 10. | உதவி ஆணையர் திருப்பூர் | திருப்பூர் மாவட்டம் |
| 5. | இணை ஆணையர் தஞ்சாவூர் | 11. | உதவி ஆணையர் தஞ்சாவூர் | தஞ்சாவூர் மாவட்டம் (திருவிடைமருதூர் மற்றும் கும்பகோணம் வட்டங்கள் தவிர) |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 12. | உதவி ஆணையர் நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் மாவட்டம் (சீர்காழி, மயிலாடுதுறை மற்றும் தரங்கம்பாடி வட்டங்கள் தவிர) |
| | | 13. | உதவி ஆணையர் திருவாரூர் | திருவாரூர் மாவட்டம் |
| 6. | இணை ஆணையர் மயிலாடுதுறை | 14. | உதவி ஆணையர் கும்பகோணம் | தஞ்சாவூர் மாவட்டத்தில் திருவிடைமருதூர், கும்பகோணம் வட்டங்கள், நாகப்பட்டினம் மாவட்டத்தில் மயிலாடுதுறை, சீர்காழி மற்றும் தரங்கம்பாடி வட்டங்கள் |
| 7. | இணை ஆணையர் விழுப்புரம் | 15. | உதவி ஆணையர் கடலூர் | கடலூர் மாவட்டம் |
| | | 16. | உதவி ஆணையர் விழுப்புரம் | விழுப்புரம் மாவட்டம் |
| | | 17. | உதவி ஆணையர் திருவண்ணாமலை | திருவண்ணாமலை மாவட்டம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 8. | இணை ஆணையர் திருச்சிராப்பள்ளி | 18. | உதவி ஆணையர் திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி மாவட்டம் |
| | | 19. | உதவி ஆணையர் அரியலூர் | பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்கள் |
| | | 20. | உதவி ஆணையர் புதுக்கோட்டை | புதுக்கோட்டை மாவட்டம் |
| | | 21. | உதவி ஆணையர் கரூர் | கரூர் மாவட்டம் |
| 9. | இணை ஆணையர் மதுரை | 22. | உதவி ஆணையர் மதுரை | மதுரை மாவட்டம் |
| | | 23. | உதவி ஆணையர் திண்டுக்கல் | திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்கள் |
| 10. | இணை ஆணையர் சிவகங்கை | 24. | உதவி ஆணையர் விருதுநகர் | விருதுநகர் மாவட்டம் |
| | | 25. | உதவி ஆணையர் பரமக்குடி | சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள் |
| 11. | இணை ஆணையர் திருநெல்வேலி | 26. | உதவி ஆணையர் திருநெல்வேலி | திருநெல்வேலி மாவட்டம் |
| | | 27. | உதவி ஆணையர் தூத்துக்குடி | தூத்துக்குடி மாவட்டம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 28. | உதவி ஆணையர் நாகர்கோயில் | கன்னியாகுமரி மாவட்டம் |

**ஆய்வாளர்கள்**

**11.** இத்துறையில் பணிபுரியும் மண்டல இணை ஆணையர்கள், கோட்ட உதவி ஆணையர்கள் ஆகியோருக்கு உதவியாக, களப்பணியில் வருவாய் வட்ட அடிப்படையில் 224 ஆய்வாளர்கள் பணிபுரிகின்றனர்.

**நேர்முக உதவியாளர்கள்**

**12.** பழநி, திருச்செந்தூர், மதுரை, ஸ்ரீரங்கம், இராமேஸ்வரம், திருத்தணி ஆகிய இணை ஆணையர் நிலை செயல் அலுவலர்கள் பணிபுரியும் திருக்கோயில்களில் உதவி ஆணையர் நிலையில் நேர்முக உதவியாளர் பணியிடங்கள் உள்ளன.

**சரிபார்ப்பு அலுவலர்கள்**

**13.** திருக்கோயில்களின் விலையுயர்ந்த ஆபரணங்கள் மற்றும் இதர விலையுயர்ந்த பொருட்களை மதிப்பீடு செய்வதற்காக தலைமையிடத்தில் இணை ஆணையர் நிலையில் 1 சரிபார்ப்பு அலுவலரும், 6 இணை ஆணையர் மண்டலங்களில் துணை ஆணையர் நிலையில் 6 சரிபார்ப்பு அலுவலர்களும் 5 இணை ஆணையர் மண்டலங்களில் உதவி ஆணையர் நிலையில் 4 சரிபார்ப்பு அலுவலர்களும் பணிபுரிகின்றனர்.

## முதுநிலை கணக்கு அலுவலர்கள்

14. இணை ஆணையர் நிலை செயல் அலுவலர்கள் உள்ள 8 திருக்கோயில்களில் இவர்களுக்கு உதவியாக 8 மண்டலத் தணிக்கை அலுவலர்கள் முதுநிலைத் தணிக்கை அலுவலர்களாகப் பணியமர்த்தப்படுகின்றனர்.

## பொறியாளர்கள்

15. திருக்கோயில்களின் திருப்பணிகளையும் கட்டுமானப் பணிகளையும் மேற்கொள்ள மதிப்பீடு தயாரித்தல், பணிகளை மேற்பார்வையிடல், அளவீடு செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள தலைமையிடத்தில் கீழ்க்காணும் பொறியாளர்கள் மற்றும் வரைவாளர்கள் பணியாற்றுகின்றனர்.

| பதவி | பணியிடங்கள் |
|---|---|
| கண்காணிப்புப் பொறியாளர் | 1 |
| செயற்பொறியாளர் | 1 |
| உதவிக்கோட்டப்பொறியாளர் | 1 |
| உதவிப்பொறியாளர்/தொழில்நுட்ப உதவியாளர். | 1 |
| உதவிப்பொறியாளர் (மின்சாரம்) | 1 |
| முதுநிலை வரைதொழில் அலுவலர் | 1 |
| இளநிலை வரைதொழில் அலுவலர் | 2 |
| வரைவாளர் | 2 |

**16.** ஒவ்வொரு இணை ஆணையர் அலுவலகத்திலும் ஒரு உதவிக் கோட்டப் பொறியாளரும் ஒரு இளநிலை வரைவாளரும் (விழுப்புரம் மண்டலம் தவிர) பணியாற்றுகின்றனர். 24 உதவி ஆணையர் அலுவலகங்களில் 24 உதவிப் பொறியாளர்கள் பணிபுரிகின்றனர். திருச்சி, சேலம், மதுரை ஆகிய இணை ஆணையர் மண்டலங்களில் ஒரு செயற்பொறியாளர் வீதம் 3 செயற்பொறியாளர்களும், ஒரு மின் உதவிப்பொறியாளர் வீதம் 3 மின் பொறியாளர்களும் உள்ளனர்.

**17.** பழநி, சமயபுரம், மதுரை, திருத்தணி, பண்ணாரி, மருதமலை, ஆனைமலை, அழகர்கோவில் ஆகிய திருக்கோயில்களின் திருப்பணிகளை மேற்கொள்ள அக்கோயில்களைச் சார்ந்த பொறியாளர்கள் பணிபுரிகின்றனர்.

**18.** திருத்தணி, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், திருச்செங்கோடு, அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் ஒரு முதுநிலை வரைவாளர் பணியிடம் வீதம் 4 பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டு சென்னை, திருச்சி, மதுரை, சேலம் ஆகிய இணை ஆணையர் மண்டலங்களில் பணிபுரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இதே போன்று, சோளிங்கர், திருச்சி மலைக்கோட்டை, அழகர்கோவில், நாமக்கல் ஆகிய திருக்கோயில்களின் சார்பாக 4 வரைவாளர் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டு மேற்கண்ட மண்டலங்களில் பணிபுரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**துறை ஸ்தபதி**

**19.** திருக்கோயில்களில் நடைபெறும் திருப்பணிகளை சிற்ப சாஸ்திர அடிப்படையில் மேற்கொள்வதற்கு தக்க ஆலோசனைகள் வழங்கவும் திருப்பணிகள் மேற்கொள்ளும்போது சிற்ப சாஸ்திர அடிப்படையில் ஏற்படும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணவும் திருப்பணிகளை மேற்கொள்ள ஏதுவாக வரைபடங்களை சிற்ப சாஸ்திர அடிப்படையில் சரிபார்த்து வழங்கவும் ஏதுவாக கண்காணிப்புப் பொறியாளர் நிலையில் இந்து சமய அறநிலையத்துறையில் 'துறை ஸ்தபதி' நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவர் மேற்கண்ட நிகழ்வுகளில் இந்து சமய அறநிலையத் துறை ஆணையருக்கு உதவியாக ஆலோசனை வழங்கி செயல்பட்டு வருகிறார்.

**மண்டல ஸ்தபதிகள்**

**20.** திருக்கோயில்களில் நடைபெறும் திருப்பணிகளையும் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தபதிகளால் செய்யப்படும் மதிப்பீடுகளையும் மேலாய்வு செய்யவும் வரைபடங்களை சரிபார்க்கவும் மாநில அளவில் 5 மண்டல ஸ்தபதிகள் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வந்தனர். இவ்வரசு பொறுப்பேற்றபின் திருக்கோயில்களின் திருப்பணியில் ஏற்பட்ட தொய்வினை கண்ணுற்று திருப்பணிகளை விரைந்து முடித்திட ஏதுவாக கூடுதலாக 6 மண்டல ஸ்தபதிகளை நியமனம் செய்யவும் ஏற்கனவே மண்டல ஸ்தபதிகளுக்கு வழங்கப்பட்ட மாத தொகுப்பூதியம் ரூ. 4000/– ரூ. 15000/– ஆக உயர்வு செய்து வழங்கவும் ஆணையிடப்பட்டது. இவ்வாணையின்படி 2012–2013ஆம் நிதியாண்டில் 6 புதிய மண்டல ஸ்தபதிகளும் 2 காலியிடங்களும் ஆக மொத்தம் 8 மண்டல ஸ்தபதிகள் நியமனம் மேற்கொள்ளப்பட்டது. 11 மண்டல

ஸ்தபதிகளுக்கும் மாத தொகுப்பூதியம் ரூ. 15,000/– திருக்கோயில்களின் நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

மேற்கண்ட புதிய மண்டல ஸ்தபதிகள் நியமனங்களைத் தொடர்ந்து ஒவ்வொரு இணை ஆணையர் மண்டலத்திற்கும் ஒரு ஸ்தபதி என்ற நிலை ஏற்பட்டதோடு திருப்பணிகளும் விரைவாக நடந்தேறி வருகின்றன.

**செயல் அலுவலர்கள்**

21. திருக்கோயில்களின் செயல்பாடு, வருமானம், அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள், முக்கியத்துவம் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு செயல் அலுவலர் பணியிடங்கள் பல்வேறு நிலைகளில் கீழ்க்கண்டவாறு ஏற்படுத்தப்பட்டுள்ளன.

| வ. எண். | செயல் அலுவலர் நிலை | பணியிடங்கள் |
|---|---|---|
| 1. | இணை ஆணையர் | 10 |
| 2. | துணை ஆணையர் | 10 |
| 3. | உதவி ஆணையர் | 27 |
| 4. | செயல் அலுவலர் நிலை 1 | 66 |
| 5. | செயல் அலுவலர் நிலை 2 | 111 |
| 6. | செயல் அலுவலர் நிலை 3 | 250 |
| 7. | செயல் அலுவலர் நிலை 4 | 154 |
| | மொத்தம் | 628 |

**திருமடங்களின் நிருவாகம்**

**22.** இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் **56** திருமடங்கள் உள்ளன. இத்திருமடங்களின் நிருவாகத்தைக் கண்காணிக்க **1** மண்டலத் தணிக்கை அலுவலர், **2** கண்காணிப்பாளர்கள், **2** ஆய்வாளர்கள், **2** தணிக்கை ஆய்வாளர்கள், **2** உதவியாளர்கள் ஆகியோர் தலைமையிடத்தில் ஆணையருக்கு உதவியாக பணிபுரிகின்றனர்.

**சமய நிறுவனங்களின் தணிக்கைகள்**

**23.** இந்து சமய நிறுவனங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்ய தலைமைத் தணிக்கை அலுவலர் ஒருவர் பணிபுரிகின்றார். இவருக்கு உதவியாக **2** துணைத் தலைமைத் தணிக்கை அலுவலர்களும் **19** மண்டலத் தணிக்கை அலுவலர்களும் **28** உதவித் தணிக்கை அலுவலர்களும் பணிபுரிகின்றனர்.

**உயர்நிலை ஆலோசனைக்குழு**

**24.** இந்து சமய நிறுவனங்கள் தொடர்பாக அரசுக்கு அவ்வப்பொழுது ஆலோசனை வழங்கிட **1959–**ஆம் ஆண்டு தமிழ்நாடு, இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன்படி **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களது தலைமையில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களை துணைத் தலைவராகவும் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசுச் செயலாளர், அலுவல் சார் உறுப்பினராகவும் இந்து சமய அறநிலையத் துறை ஆணையர், அலுவல் சார் உறுப்பினர்–

செயலராகவும் கீழ்க்கண்ட 10 அலுவல் சாரா உறுப்பினர்களையும் உள்ளடக்கி உயர்நிலை ஆலோசனைக்குழு அமைக்கப்பட்டது.

| | |
|---|---|
| 1. | சர்வஸ்ரீ அம்பலவாண பண்டார சன்னதி, திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை |
| 2. | ஸ்ரீமத் கலியன் இராமானுஜ ஜீயர் ஸ்வாமிகள், ஸ்ரீ வானமாமலை மடம், திருநெல்வேலி |
| 3. | ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக் குமாரசாமி தம்பிரான் சுவாமிகள், காசி மடம், திருப்பனந்தாள் |
| 4. | ஸ்ரீமத் ஆண்டவன் சுவாமிகள், ஸ்ரீமத் ஆண்டவன் ஆசிரமம் (பெரிய ஆசிரமம்) ஸ்ரீரங்கம் |
| 5. | திரு. கருமுத்து தி. கண்ணன், மதுரை |
| 6. | திரு. எம். நந்தகோபால், சென்னை – 600 034 |
| 7. | திருமதி. தேவகி முத்தையா, சென்னை – 600 085 |
| 8. | திரு. பி. ஆர். இராமசுப்பிரமணியராஜா, இராஜபாளையம் |
| 9. | மணப்பாக்கம் திரு. மு. காமராஜ், சென்னை – 600 125 |
| 10. | திரு. விஜயகுமார் ரெட்டி, சென்னை – 600 034 |

**மாவட்டக் குழு நியமனம்**

25. ஒவ்வொரு வருவாய் மாவட்ட எல்லைக்குட்பட்ட இந்து சமய அற நிறுவனங்களுக்கு அறங்காவலர்கள் நியமனம் செய்ய தகுதியுள்ளோர் பட்டியல் தயாரிக்க 3க்கு குறையாத 5க்கு மிகாத அலுவல்சாரா உறுப்பினர்களைக் கொண்ட குழு அரசால் நியமிக்கப்படுகிறது. இக்குழு ரூ. 10 இலட்சமும் அதற்கு மேலும் ஆண்டு வருமானம் பெறும் இந்து சமய அறநிறுவனங்களைத் தவிர பிற

அற நிறுவனங்களுக்கு அறங்காவலர்கள் நியமனம் செய்ய தகுதியுள்ளோர் பட்டியல் தயாரித்து அளிக்க வேண்டும். இக்குழுவின் தகுதிக் காலம் 3 ஆண்டுகள் ஆகும். மாவட்டக் குழு நியமனம் 16.7.2006 முதல் சட்டத்திருத்தத்தின் மூலம் கடந்த அரசால் இரத்து செய்யப்பட்டது. மாவட்டக் குழு தேவையின் அவசியத்தைக் கருத்தில் கொண்டு மாவட்டக் குழு நியமனம் செய்யும் சட்டப்பிரிவை அமுல்படுத்திட சட்டத்திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. இச்சட்டம் 7.12.2012 முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் ஒரு மாவட்டக் குழு ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**அறங்காவலர்கள் நியமனம்**

**26.** இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் சட்டத்தின்கீழ் இந்து சமய நிறுவனங்களின் நிருவாகத்தை நிருவகிப்பதற்காக பரம்பரை நிருவாகம் அல்லாத ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் பரம்பரை அல்லாத அறங்காவலர்கள் நியமனம் செய்ய வேண்டும். இதன்படி ஒவ்வொரு அறங்காவலர் குழுவும் 3 அறங்காவலர்களுக்குக் குறையாமலும் 5 அறங்காவலர்களுக்கு மிகாமலும் அமைய வேண்டும். இக்குழுவில் பெண் உறுப்பினர் ஒருவரும் ஆதிதிராவிடர் அல்லது பழங்குடியைச் சார்ந்த உறுப்பினர் ஒருவரும் இடம் பெறவேண்டும். இவ்வாறு நியமனம் செய்யப்படும் அறங்காவலர் குழுவின் பதவிக்காலம் இரண்டாண்டுகள் ஆகும்.

**அதிகார வரம்பு**

**அரசு**

இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டப்பிரிவு 46(iii)ன் கீழ் உள்ள ரூ. 10 இலட்சம் மற்றும் அதற்கு மேல் ஆண்டு வருமானம் பெறும் இந்து சமய நிறுவனங்களுக்கு 5 பரம்பரை அல்லாத அறங்காவலர்கள் அரசால் நேரடியாக நியமிக்கப்படுவர்.

**ஆணையர்**

28. இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டப்பிரிவு 46(ii)ன் கீழ் ரூ. 2 இலட்சத்திலிருந்து ரூ. 10 இலட்சத்திற்கு குறைவாக ஆண்டு வருமானம் பெறும் இந்து சமய நிறுவனங்களுக்கு 3 பரம்பரை அல்லாத அறங்காவலர்கள் ஆணையரால் நியமிக்கப்படுவர்.

**இணை ஆணையர்**

29. இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டப்பிரிவு 46(i)ன் கீழ் ரூ. 10,000/–த்திலிருந்து ரூ.2 இலட்சத்துக்கு குறைவாக ஆண்டு வருமானம் பெறும் இந்து சமய நிறுவனங்களுக்கு 3 பரம்பரை அல்லாத அறங்காவலர்கள் அந்தந்த மண்டல இணை ஆணையரால் நியமிக்கப்படுவர்.

**உதவி ஆணையர்**

30. இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டப்பிரிவு 49(i)ன் கீழ் ரூ.10,000/–த்திற்கு குறைவாக ஆண்டு வருமானம் பெறும் இந்து சமய நிறுவனங்களுக்கு 3 பரம்பரை அல்லாத அறங்காவலர்கள் உதவி ஆணையரால் நியமிக்கப்படுவர்.

**31.** ஆணையர், இணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் ஆகியோரால் பரம்பரை அல்லாத அறங்காவலர்கள் நியமிக்கப்படும் இந்து சமய நிறுவனங்களில் கூடுதலாக இரண்டு பரம்பரை அல்லாத அறங்காவலர்கள் நியமனம் தேவையெனில் அரசால் நேரடி நியமனம் செய்யப்படும்.

**தக்கார் நியமனம்**

**32.** அறங்காவலர் குழுவின் பதவிக்காலம் முடிந்து மீண்டும் அறங்காவலர் குழு நியமிக்கப்படும் வரை, இக்குழுவின் கடமைகளை நிறைவேற்றிட இடைக்கால ஏற்பாடாக தகுதியான ஒருவர் தக்காராக நியமனம் செய்யப்படுவார்.

**நில நிருவாகம்**

33. இந்து சமய நிறுவனங்களுக்குச் சொந்தமாக மொத்தம் 4,78,347.94 ஏக்கர் பரப்புடைய நிலங்கள் உள்ளன. அவற்றின் விவரம் பின்வருமாறு:

| **நிலத்தின் வகைப்பாடு** | **திருக்கோயில் நிலங்கள்** | **திருமடம் நிலங்கள்** | **மொத்த நிலங்கள்** |
|---|---|---|---|
| | (ஏக்கர் இலட்சத்தில்) | | |
| நன்செய் | 1.83 | 0.21 | 2.04 |
| புன்செய் | 2.18 | 0.35 | 2.53 |
| மானாவாரி | 0.21 | இல்லை | 0.21 |
| மொத்தம் | 4.22 | 0.56 | 4.78 |

34. இந்து சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான இடங்களில் 22,600 கட்டடங்களும் 33,665 மனைகளும் வாடகைக்கு விடப்பட்டுள்ளன. 1,23,729 குத்தகைதாரர்கள் விவசாய நிலங்களைப் பயிர் செய்து வருகின்றனர்.

35. இந்து சமய அறநிறுவனங்களுக்குச் சொந்தமான மேற்கண்ட அசையாச் சொத்துக்களிலிருந்து உத்தேசமாக ரூ. 58.68 கோடி ஆண்டு வருவாய் பெறப்படுகிறது.

**நியாய வாடகை நிர்ணயம்**

36. இந்து சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான மனைகள் மற்றும் கட்டடங்களுக்கான நியாயமான வாடகை நிர்ணயம் செய்வதற்காக இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன்படி, நியாய வாடகை நிர்ணயம் செய்ய மண்டல இணை ஆணையர், செயல் அலுவலர் அல்லது அறங்காவலர் அல்லது அறங்காவலர் குழுத் தலைவர், பதிவுத்துறையின் மாவட்டப் பதிவாளர் ஆகியோரைக் கொண்ட நியாய வாடகை நிர்ணயக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த நியாய வாடகை நிர்ணயக் குழுவின் மூலமாக, வணிகம், குடியிருப்பு ஆகியவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வரும் மனைகள் மற்றும் கட்டடங்களுக்கு நியாய வாடகை நிர்ணயம் செய்யப்படுகிறது.

**வருவாய் நீதிமன்றம்**

37. இந்து சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான விவசாய நில குத்தகை நிலுவைத் தொகை வசூலிக்கவும், விவசாய நிலங்களுக்கு நியாய வாடகை நிர்ணயிக்கவும், குத்தகைதாரர்களை வெளியேற்றவும் வழக்கிட தனி துணை ஆட்சியர் தலைமையில் வருவாய் நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. இதன் விவரம் பின்வருமாறு:

| வருவாய் நீதிமன்றங்கள் | முகாம் வருவாய் நீதிமன்றங்கள் |
|---|---|
| 1. தஞ்சாவூர் | 1. கும்பகோணம் |
| 2. திருச்சிராப்பள்ளி | 2. சேலம் |
| 3. மயிலாடுதுறை | 3. தென்காசி |
| 4. திருவாரூர் | |
| 5. கடலூர் | |
| 6. மதுரை | |

மேற்கண்ட வருவாய் நீதிமன்றங்கள் தவிர லால்குடி, மன்னார்குடி, நாகப்பட்டினம், திருநெல்வேலி ஆகிய 4 இடங்களில் 2012–2013ஆம் ஆண்டில் கூடுதலாக வருவாய் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

38. 2012–2013ஆம் நிதியாண்டில் வருவாய் நீதிமன்றங்களில் நிலுவையில் இருந்த 20720 வழக்குகளில் 3296 வழக்குகளுக்குத் தீர்வு காணப்பட்டு ரூ. 504.04 இலட்சம் குத்தகை நிலுவைத்தொகை வசூலிக்க உத்திரவிடப்பட்டது. குத்தகை நிலுவையை முழுமையாக வசூலித்திட தேவையான நடவடிக்கைகள் முழு முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**நிலங்களை மீட்டல்**

39. நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டச் செயலாக்கத்தின் (UDR திட்டம்) போது இந்து சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்கள் தனிப்பட்ட நபர்களின் பெயரில் பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளன. இவற்றை சரி செய்து மீண்டும் அந்தந்தத் திருக்கோயில்களின் பெயரில் பட்டா பெறுவதற்கு ஏதுவாக மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களைத்

தலைமையிடமாகக் கொண்டு இரு மாவட்ட வருவாய் அலுவலர்கள் தனி அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டு செயல்பட்டு வருகின்றனர்.

**40. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களது அரசு **188** திருக்கோயில்களுக்குச் சொந்தமான **998.52** ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்கள் தனியார் பெயரில் தவறாக பட்டா மாற்றம் செய்யப்பட்டதைக் கண்டறிந்து சம்பந்தப்பட்ட திருக்கோயில்களின் பெயரில் மீண்டும் பட்டா மாற்றம் செய்ய ஆணை பெறப்பட்டது.

**41.** திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களின் பதிவை கணினிச் சிட்டாவில் மாறுதல் செய்து தனிப்பட்டவர்களின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது. **2012–2013**ஆம் ஆண்டு நிதியாண்டில் **62** திருக்கோயில்களுக்குச் சொந்தமான **393.42** ஏக்கர் பரப்பளவை உள்ளடக்கிய பதிவுகள் தனியார் பெயரில் இருந்ததை மாற்றம் செய்து திருக்கோயில் பெயரில் பதிவை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**42.** மேற்கண்டவாறு திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களை, தனியார் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டவற்றையும், கணினி சிட்டாவில் தனி நபர் பெயரில் பதிவு செய்யப்பட்டதையும் மாநிலம் முழுவதும் கண்டறிந்து கோயில்களின் பெயருக்கு மாற்றிட, திருக்கோயில்களின் சொத்துக்களைப் பாதுகாக்க சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

**ஓய்வு பெற்ற துணை ஆட்சியர், வட்டாட்சியர் மற்றும் நில அளவையர் நியமனம்**

**43.** இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அறநிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களை தனிப்பட்ட நபர்களின் பெயரில் பட்டா மாறுதல் செய்யப்பட்டிருந்ததை திருக்கோயில் பெயரில் மாற்றி ஆணை பிறப்பிக்க மதுரை மற்றும் கோயமுத்தூர் மாவட்டங்களில் செயல்பட்டு வரும் **2** மாவட்ட வருவாய் அலுவலர் பணியிடங்களை தவிர்த்து புதியதாக **5** மாவட்ட வருவாய் அலுவலர் பணியிடங்கள் ஏற்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவர்களது பணியை விரைவுபடுத்த ஏதுவாக தொகுப்பூதிய அடிப்படையில் **6** ஓய்வு பெற்ற துணை ஆட்சியர்கள், **10** ஓய்வு பெற்ற வட்டாட்சியர்கள், **3** ஓய்வு பெற்ற நில அளவையர் ஆகியோர் பணியமர்த்தப்பட்டனர். இவர்கள் தவிர கூடுதலாக **7** ஓய்வு பெற்ற வட்டாட்சியர்களையும் **16** ஓய்வு பெற்ற நில அளவையர்களையும் திருக்கோயில் நிதியிலிருந்து தொகுப்பூதிய அடிப்படையில் நியமித்துக் கொள்வதற்கு அரசால் ஆணையிடப்பட்டது. **2012–2013**ஆம் ஆண்டில் **4** ஓய்வு பெற்ற வட்டாட்சியர்களையும் **5** ஓய்வு பெற்ற நில அளவையர்களையும் மேற்கண்டவாறு திருக்கோயில் பெயரில் பட்டா பதிவு செய்து பெற விரைவு நடவடிக்கைகள் மேற்கொள்ள கூடுதலாக நியமிக்கப்பட்டது.

**ஆக்கிரமிப்பு அகற்றுதல்**

**44. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களது அரசு பொறுப்பேற்ற பின்பு,** இந்து சமய அறநிறுவனங்களுக்குச் சொந்தமான ஆக்கிரமிப்பில் இருந்த **397.51** ஏக்கர் பரப்புள்ள நிலங்களும் **105.0164** கிரவுண்டு பரப்புள்ள மனைகளும் **48.1390** கிரவுண்டு பரப்புள்ள கட்டடங்களும் திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டுள்ளன.

**கூட்டு ஆக்கிரமிப்புகளை முறைப்படுத்துதல்**

**45.** இந்து சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான காலிமனைகளை குடியிருப்புக்காகக் கூட்டாக ஆக்கிரமித்து **30** ஆண்டுகளுக்கு மேலாகக் குடியிருந்து வருபவர்களை வாடகைதாரர்களாக கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

i. 30 ஆண்டுகளுக்கு மேலாக குடியிருப்பு நோக்கத்திற்காக மட்டும் நிலம் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

ii. அரசாணையின்படி நிர்ணயிக்கப்பட்ட நியாய வாடகையை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

iii. வாடகை நிர்ணயம் 1.7.1998 நாள் முதல் செயற்படுத்த வேண்டும்.

iv. வாடகை நிலுவைத் தொகை 12 மாதங்களில் சம தவணைகளில் செலுத்திட வேண்டும்.

v. 10 மாத வாடகை நன்கொடையாக வழங்கிட வேண்டும்.

**46. 2012–2013**ஆம் நிதியாண்டில் பல்வேறு இடங்களில் **1252** ஆக்கிரமிப்பாளர்கள் **71.05** ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்ததை வாடகைதாரராக வரன்முறை செய்யப்பட்டது. அவர்களது குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி, மின் வசதி போன்றவற்றிற்குத் தடையின்மைச் சான்றுகள் வழங்கப்பட்டது.

**அன்னதானத் திட்டம்**

**47.** **“மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்**

**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே” –**

என்ற மணிமேகலைக் காப்பிய வரிகளுக்கு ஏற்ப **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களது உன்னதத் திட்டமான ‘‘அன்னதானத் திட்டம்’’ 2002–ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 23–ஆம் நாள் சென்னை மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலில் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

48. அருள் வேண்டி வரும் இறை அன்பர்களுக்கு இறையருளோடு அன்னதானமும் வழங்கும் உன்னதத் திட்டம் படிப்படியாக 360 திருக்கோயில்களுக்கு **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களது முந்தைய ஆட்சிக்காலத்தில் விரிவுப்படுத்தப்பட்டது. 2006–2011–ஆம் ஆண்டுகளில் 2 திருக்கோயில்களுக்கு மட்டுமே இத்திட்டம் விரிவுப்படுத்தப்பட்டது.

49. 2011–2012–ஆம் ஆண்டில் மேலும் 106 திருக்கோயில்களுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. பக்தர்களின் வருகையையும் தேவையையும் கருத்திற்கொண்டு இத்திட்டத்தை 2012–2013–ஆம் ஆண்டில் மேலும் 50 திருக்கோயில்களுக்கு **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஆணையின்படி விரிவுபடுத்தப்பட்டது. கடந்த 5 ஆண்டுகளில் தொய்வடைந்த இவ்வுன்னதத் திட்டத்திற்குப் புத்துயிர் அளித்து தற்போது 518 திருக்கோயில்களில் ஆன்றோர்கள், சான்றோர்கள் பாராட்ட, சீரும் சிறப்போடும் அன்னதானத் திட்டம் செயல்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் நாளொன்றுக்கு

34075 பக்தர்கள் பயன்பெறுகின்றனர். இதற்கென நாளொன்றுக்கு ரூ.6.85 இலட்சம் செலவிடப்படுகிறது.

**நாள் முழுவதும் அன்னதானம்**

50. கடந்த 13.9.2012 அன்று **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களது பொற்கரத்தால் ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம் துவக்கி வைக்கப்பட்டது. அன்றே பழனி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலிலும் இத்திட்டம் துவங்கப்பட்டது. இதன் மூலம் நாள் ஒன்றுக்கு 6200 பக்தர்கள் பயன்பெறுகின்றனர். இதற்கென நாளொன்றுக்கு ரூ.1.24 இலட்சம் செலவிடப்படுகின்றது. பக்தர்கள் நாளில் எப்பொழுது வேண்டுமானாலும் சாப்பிடலாம். இத்திட்டம் பக்தர்களின் பெரும் பாராட்டுக்குரிய திட்டமாக செயல்படுகிறது.

**ஆன்மிக மற்றும் ஒழுக்கநெறி வகுப்பு**

51. நமது பண்டைய இலக்கியங்களில் உள்ள நற்பண்புகள், நீதிநெறி கருத்துக்களை கதைகள் வாயிலாக குழந்தைகளின் மனதில் ஆழப்பதித்திட, சனிக்கிழமைதோறும் ஆன்மிக, நீதிநெறி வகுப்புகளை தெரிவு செய்யப்பட்ட திருக்கோயில்களில் நடத்திட **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இந்த வகுப்புகளின்போது சிற்றுண்டி வழங்கி வருவதோடு சிறந்த மாணவ மாணவியருக்கு பரிசுகளும் அளிக்கப்படுகின்றன.

2012–2013–ஆம் ஆண்டில் 380 திருக்கோயில்களில் 8922 மாணவ மாணவியர் ஆன்மிக மற்றும் ஒழுக்க நெறி வகுப்பில் கலந்து கொண்டனர்.

அவர்களில் சிறந்த மாணவ மாணவியர் தேர்வு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கி சிறப்பிக்கப்பட்டனர்.

**சிறப்பு வழிபாடும் பொது விருந்தும்**

52. நிதி மிகுந்த திருக்கோயில்களில் ஆண்டுதோறும் சுதந்திரத் திருநாள், பேரறிஞர் அண்ணா நினைவு நாள் ஆகிய நாட்களில் அனைத்துச் சமுதாய மக்களும் ஏற்றத் தாழ்வின்றி பங்கு பெறும் வகையில், சிறப்பு வழிபாடும் பொது விருந்தும் நடத்தப்படுகின்றன. 2012–2013–ஆம் ஆண்டு 768 திருக்கோயில்களில் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து சிறப்புடன் நடத்தப்பட்டன.

**யானைகள் சிறப்பு நல வாழ்வு முகாம்**

53. **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணையின்படி திருக்கோயில்களில் பராமரிக்கப்படும் யானைகளுக்கும் தனியாரால் பராமரிக்கப்படும் யானைகளுக்கும் உடல் நலமும் மனநலமும் பேண யானைகளின் உடல்நலனுக்கு ஏற்ற குளிர்ந்த இயற்கைச் சூழ்நிலையில் ‘‘யானைகள் சிறப்பு நல வாழ்வு முகாம்’’ 2003, 2004, 2005–ஆம் ஆண்டுகளில் முதுமலை தெப்பக்காடு பகுதியில் நடத்தப்பட்டது. கடந்த ஆண்டுகளில் கைவிடப்பட்ட இம்முகாம் 2011–2012–ஆம் நிதியாண்டில் மீண்டும் 14.12.2011 அன்று முதல் 48 நாட்கள் முதுமலை தெப்பக்காடு பகுதியில் சிறப்புற நடைபெற்றது. 2012–2013–ஆம் ஆண்டில், கோயமுத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், தேக்கம்பட்டி அருள்மிகு வனபத்திரக்காளியம்மன் திருக்கோயில் அருகில் பவானி ஆற்றங்கரையில் நடத்தப்பட்ட இம்முகாமில் தமிழகத் திருக்கோயில்கள் மற்றும் திருமடங்கள் பராமரிப்பில் உள்ள 34 யானைகள் பங்குபெற்று பயனடைந்தன. மேலும் இம்முகாமின் பயனறிந்து

பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத் திருக்கோயிலைச் சேர்ந்த ஒரு யானையும் பங்கேற்றது. இம்முகாமில் பங்கேற்க இயலாத **10** யானைகளுக்கு அவை பராமரிக்கப்படும் கோயில்கள் மற்றும் திருமடங்களில் முகாமில் வழங்கப்பட்டது போலவே ஊட்டச் சத்துணவுகளும், மருந்துகளும் வழங்கி அவைகளின் மன நலமும் உடல் நலமும் பேணப்பட்டது. இம்முகாமில் யானைகளுக்கு மட்டுமின்றி யானைப்பாகர்களுக்கும் அவர்கள் உடல்நலம் பேணவும் யானைகள் வளர்ப்பு மற்றும் பாதுகாப்பு குறித்து அறியவும் பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த முகாமிற்கு ரூ.75 இலட்சம் அரசு மானியமாக வழங்கப்பட்டது.

54. ‘‘மனிதர்கள் மட்டுமல்லாமல் ஏனைய உயிரினங்களும் நம்முடைய அன்புக்கு உரியவைதான்’’ என்ற **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களது உயரிய எண்ணத்தின்படி யானைகளின் உடல் நலனுக்கேற்ற குளிர்ந்த இயற்கைச் சூழ்நிலையில் நடத்தப்பட்ட இந்தப் புத்துணர்வு முகாம் அவற்றிற்குக் கிடைத்த மகிழ்ச்சியான ஓய்வாகும்.

**ஏழை எளியோருக்குத் திருமணம்**

55. இந்து சமயத்தைச் சார்ந்த ஏழை எளிய மக்களுக்கு நிதி வசதிமிக்க திருக்கோயில்கள் சார்பாக **1981**–ஆம் ஆண்டு **புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்** அவர்களால் திருமணம் செய்துவைக்க இத்திருமணத்திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் ஆதிதிராவிட வகுப்பினர், பழங்குடி வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோர் பயன்பெற்றனர். **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் தலைமையில் **2002**–ஆம் ஆண்டு **1008** இணைகளுக்கும் **2003**–ஆம் ஆண்டு **1053** இணைகளுக்கும் திருமணங்கள் திருவேற்காட்டில்

நடைபெற்றன. மேலும், 489 இணைகளுக்கு சில திருக்கோயில்களில் திருமணங்கள் நடத்தப்பட்டன. கடந்த ஆட்சிக் காலத்தில் கைவிடப்பட்ட இத்திட்டத்தை **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களது ஆணையின்படி சிறப்புடன் செயல்படுத்திட நடவடிக்கை மேற்கொண்டு 2012–2013–ஆம் ஆண்டில் ஒரு இணைக்கு 4 கிராம் தங்க திருமாங்கல்யம் மற்றும் ரூபாய் 10,000/– செலவில் சீர்வரிசைப்பொருட்கள் என்ற திட்டத்தில் 1006 இணைகளுக்குத் திருமணம் 18.06.2012 அன்று திருவேற்காடு திருக்கோயில் அருகில் சீரும் சிறப்புடன் நடத்தப்பட்டது. இத்திட்டத்திற்கு ரூ. 1.51 கோடி செலவிடப்பட்டது.

**கம்பி வட ஊர்திகள்**

56. பழநி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலுக்கு வருகை தரும் மாற்றுத்திறனாளிகள், முதியோர், குழந்தைகள் ஆகியோர் மலை மீது அமைந்துள்ள இறைவனை எளிதாக வழிபட ஏதுவாக முதல் முறையாக ரூ.4 கோடி செலவில் கம்பி வட ஊர்தி அமைத்திட **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களால் ஆணையிடப்பட்டு 2004–ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 3–ஆம் நாள் கம்பி வட ஊர்தியைத் தொடங்கி வைத்து பக்தர்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தார்கள். இந்தக் கம்பி வட ஊர்தி பக்தர்களின் பெரும் வரவேற்பு பெற்றதையடுத்து, பழநி திருக்கோயிலுக்கு சர்வதேச தரத்தில் மேலும் ஒரு கம்பி வட ஊர்தி அமைத்திட உலகளாவிய அளவில் தகுதியுள்ளோர் விருப்பம் தெரிவிக்கக் கோரப்பட்டுள்ளது. சோளிங்கர், அருள்மிகு இலட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயிலுக்கும், கரூர் மாவட்டம், அய்யர்மலை, அருள்மிகு இரத்தினகிரீஸ்வரர் திருக்கோயிலுக்கும் புதிதாக ஒரு கம்பி வட ஊர்தியை அமைத்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**மின்கல மகிழுந்து**

**57. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் 6 இருக்கைகள் கொண்ட மின்கல மகிழுந்து ஒன்றினை மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியோர் பயன்பாட்டிற்காக ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலுக்கு 2011–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 19–ஆம் நாள் வழங்கினார்கள். பெரிய வளாகங்கள் கொண்ட திருக்கோயில்களில் மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியோர் எளிதில் தரிசனம் செய்ய ஏதுவாக **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களது ஆணையின்படி 8 திருக்கோயில்களில் மின்கல மகிழுந்து வாங்கிப் பயன்படுத்தப்படுகிறது.

**மின்கல மகிழுந்து பயன்பாட்டில் உள்ள திருக்கோயில்கள்**

| வ. எண். | திருக்கோயில் பெயர் | மகிழுந்து எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் | 2 |
| 2. | பழனி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் | 3 |
| 3. | திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் | 1 |
| 4. | திருத்தணி, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் | 1 |
| 5. | திருவாரூர், அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில் | 1 |
| 6. | திருவண்ணாலை, அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயில் | 1 |
| 7. | திருவொற்றியூர், அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில் | 1 |
| 8. | திருவானைக்காவல், அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத | 1 |

| | | |
|---|---|---|
| | ஜம்புகேஸ்வரர் திருக்கோயில் | |
| | மொத்தம் | **11** |

**திருப்பணி**

**58. "திருக்கோயில் பொருத்த ஓர் செங்கல் இடுவார் உலகாள்வார்"–** என்ற முதுமொழிக்கேற்ப வரலாற்றுச் சிறப்பும் தொன்மையும் வாய்ந்த திருக்கோயில்களையும் ஆழ்வார்களாலும் நாயன்மார்களாலும் பாடிப் புகழப்பட்ட புனிதத் திருத்தலங்களையும் கிராமப்புறங்களில் அமைந்துள்ள சிறு திருக்கோயில்கள், ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் வாழும் பகுதிகளிலுள்ள சிறு சிறு திருக்கோயில்கள் ஆகியவற்றையும் திருப்பணி செய்து பேணிப் பாதுகாப்பது இவ்வரசின் தலையாயப் பணியாகும்.

**59.** திருக்கோயில் திருப்பணிகள் கீழ்க்காணும் நிதி ஆதாரங்களிலிருந்து மேற்கொள்ளப்படுகின்றன.

- பொதுமக்கள் அளிக்கும் நன்கொடை
- திருக்கோயில்களின் சொந்த நிதி
- நிதிமாற்ற நிதி
- அரசு மானியம்
- பொதுநல நிதி
- ஆலய மேம்பாட்டு நிதி
- கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணி நிதி
- திருக்கோயில்  திருப்பணி மற்றும் அறப்பணி நிதி

- உபயத் திருப்பணி
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள திருக்கோயில்களுக்கான திருப்பணி நிதி
- நிதி ஆணைய நிதி

60. திருக்கோயில்களின் திருப்பணிகளை மேற்கொள்வதற்கு அந்தந்த பகுதி மக்களோ, செல்வந்தர்களோ ஏற்றுச் செய்திட முன் வரும்போது இத்துறை மூலமாகவும் நிதியுதவி செய்யப்படுகிறது.

**நன்கொடை**

61. இறை நம்பிக்கை, ஆன்மிகம் மற்றும் சமய ஈடுபாடு கொண்டோர், தொழிலதிபர்கள், செல்வந்தர்கள், தனியார் நிறுவனங்கள், பொதுமக்கள் ஆகியோர் மனமுவந்து அளிக்கும் நன்கொடையைக் கொண்டு திருப்பணிகள் நடைபெறுகின்றன. 2012–2013–ஆம் நிதியாண்டில் 132 திருப்பணிகள் ரூ. 928.97 இலட்சம் மதிப்பீட்டில் நன்கொடை மூலம் திருப்பணி செய்ய இசைவளிக்கப்பட்டது.

**திருக்கோயில் நிதி**

62. உபரி நிதியுள்ள திருக்கோயில்களின் திருப்பணி அவைகளின் நிதியிலிருந்தே மேற்கொள்ளப்படுகின்றன. 2012–2013–ஆம் நிதியாண்டில் 273 திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கு, ரூ. 96.36 கோடி திருக்கோயில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

**நிதிமாற்றம்**

63. இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் சட்டத்தின் 36–வது பிரிவின் கீழ், நிதி வசதி மிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து நிதி தேவையான திருக்கோயில்களுக்குத் திருப்பணிகளை மேற்கொள்ள நிதிமாற்றம் மூலம் நிதியுதவி வழங்கப்படுகிறது. 2012–2013–ஆம் நிதியாண்டில் 75 திருக்கோயில்களுக்கு ரூ. 828.36 இலட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டது.

அரசு மானியம்

64. ஆண்டுதோறும் திருக்கோயில்களின் சீரமைப்புக்கென ரூ. 3 கோடி அரசு மானியமாக வழங்கப்படுகிறது. 2012–2013–ஆம் நிதியாண்டில் 45 திருக்கோயில்கள் சீரமைப்புப்பணிக்கு ரூ. 3 கோடி அரசு மானியம் வழங்கப்பட்டது.

பொது நல நிதி

65. தனி நபர்கள் தானாக முன்வந்து அளிக்கும் நன்கொடை மற்றும் இந்து சமய நிறுவனங்கள் தானாக முன்வந்து அளிக்கும் தொகை ஆகியவற்றை ஆணையரின் பதவிப்பெயரில் “பொது நல நிதி” என்ற நிதியம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 2012–2013–ஆம் நிதியாண்டில் 204 திருக்கோயில்கள் திருப்பணிக்கு ரூ. 11.69 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**ஆலய மேம்பாட்டு நிதி**

**66.** திருக்கோயில்களின் மேம்பாட்டிற்காக நிதி வசதி மிகுந்த திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ.8 கோடி பெற்று மைய நிதி ஏற்படுத்தப்பட்டது. இம்மைய நிதியிலிருந்து பெறப்படும் வட்டித் தொகையிலிருந்து பழைமை மற்றும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. 2012–2013–ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின்கீழ் 2 திருக்கோயில்களுக்கு ரூ. 20 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.

**கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணி நிதி**

**67.** இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள சிறு கிராமப்புறத் திருக்கோயில்களின் புனரமைப்புப் பணிக்கு நிதியுதவி வழங்கிட ‘‘கிராமப்புறத் திருக்கோயில் திருப்பணி திட்டம்’’ என்ற ஒரு திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்திற்கென பழநி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலின் உபரி நிதியிலிருந்து ரூ. 2 கோடி நிதிமாற்றம் செய்து மைய நிதி ஏற்படுத்தப்பட்டது. 2012–2013–ஆம் ஆண்டிற்கு 256 திருக்கோயில்களுக்கு ரூ. 1.28 கோடி வழங்கப்பட்டது. தற்போது திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.50,000/– என உயர்த்தி வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி** அம்மா அவர்களின் ஆணையின்படி திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.50,000/– வழங்கப்பட்டது.

**திருக்கோயில்கள் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி**

68. திருக்கோயில்களின் தொன்மை, கலை, பண்பாடு ஆகியவற்றைப் பேணிக்காக்க **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் 1991–ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 5–ஆம் நாள் ‘‘முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி’’ என்ற நிதியத்தை உருவாக்கினார். இந்நிதி அமைப்புக்கு தமது சொந்த நிதியிலிருந்து ரூ.1,00,008/–ஐ நன்கொடையாக அளித்தார்கள். இந்நிதிக்கு தொண்டுள்ளம் கொண்டோர், தொழிலதிபர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து நன்கொடைகள் பெறப்பட்டன. இந்நிதியமைப்பு ‘‘திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி’’ என்று தற்போது அழைக்கப்படுகிறது. 2012–2013–ஆம் நிதியாண்டில் இந்நிதியத்திலிருந்து ரூ. 65.24 இலட்சம் கன்னியாகுமரி மாவட்டத் திருக்கோயில்கள் மேம்பாட்டிற்காகவும் காஞ்சிபுரம், அய்யங்கார்குளம், அருள்மிகு சஞ்சீவிராயர் திருக்கோயில் திருப்பணிக்காகவும் வழங்கப்படவுள்ளது.

**உபயத் திருப்பணி**

69. பக்தர்கள் தாமே முன்வந்து தன் சொந்த நிதி மூலம் திருக்கோயில்களின் திருப்பணியைச் செய்வது வழக்கத்திலுள்ளது. இவர்களது திருப்பணி, துறையின் கண்காணிப்புடன் ஊக்குவிக்கப்படுகிறது. 2012–2013–ஆம் ஆண்டில் ரூ. 17.56 கோடி மதிப்பீட்டில் 72 உபயத் திருப்பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள திருக்கோயில் திருப்பணி**

70. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையில் இல்லாத சிறு திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்திட நிதி மிகுந்த திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து நிதி பெறப்பட்டு திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000/– வீதம் நிதியுதவி அளிக்கப்பட்டு வருகின்றது. 2011–2012–ஆம் ஆண்டில் இத்திட்டத்தை நிறைவேற்ற இத்தொகை போதுமானதாக இல்லை என்பதறிந்து திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.50,000/– என உயர்வு செய்யப்பட்டு, 300 திருக்கோயில்கள் புனரமைப்புக்கு ரூ.1.50 கோடி வழங்கப்பட்டது. 2012–2013–ஆம் ஆண்டு மேலும் 324 திருக்கோயில்கள் புனரமைப்புக்கு ரூ.1.62 கோடி வழங்கப்பட்டது.

நிதி ஆணைய நிதி

71. தொன்மை வாய்ந்த திருக்கோயில்களை அவற்றின் பழைமை மாறாமல் புதுப்பிக்க மத்திய நிதி ஆணையம் நிதியுதவி வழங்குகின்றது. 2012–2013–ஆம் ஆண்டில் 13–வது நிதி ஆணையம் மூலம் 43 திருக்கோயில்களுக்கு பழைமை மாறாது புனரமைப்பதற்கு ரூ.22.50 கோடி வழங்கப்பட்டது.

சுற்றுலாத்துறை நிதி

72. தமிழகத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளை கவரும் கலைக் களஞ்சியங்களாக தமிழகத் திருக்கோயில்கள் திகழ்கின்றன. திருக்கோயில்களுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் உள்ளிட்ட பக்தர்களின் நலன் கருதி கழிப்பறை, குளியலறை, குடிநீர், தங்கும் கூடம்,

தகவல் மையங்கள், அணுகு சாலைகள், உயர்கோபுர மின்விளக்குகள், பொருட்கள் பாதுகாப்பு அறை, வாகன நிறுத்துமிடம், புல்வெளி அமைப்பு போன்ற அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க சுற்றுலாத் துறையும் அறநிலையத் துறையும் இணைந்து செயல்படுகின்றன.

## உழவாரப் பணி

73. தமிழகத்தின் பழம்பெரும் திருக்கோயில்கள் வானளாவிய கோபுரங்களையும் அழகிய விமானங்களையும் மண்டபங்களையும் பெரிய மதிற்சுவர்களையும் உள்ளடக்கி பாரம்பரியமிக்க வரலாற்றுச் சின்னங்களாக உள்ளன. இவற்றை பேணிப் பாதுகாப்பது நமது தலையாய கடமையாகும். இக்கட்டுமானங்களில் செடிகளும், கொடிகளும், மரங்களும் முளைத்து கட்டுமானங்களுக்குப் பெரும் சேதம் விளைவிக்கிறது. சமயக் குரவர்களில் ஒருவரான அப்பரடிகள் தொடங்கிச் செய்த உழவாரப் பணிக்கு புத்துயிர் அளித்திடும் வகையில் 2012–2013–ஆம் ஆண்டில் இவ்விடர்களைக் களைந்திட உழவாரப் பணிகள் மீண்டும் தொடங்கப்பட்டன. இதன் பயனாக 640 திருக்கோயில்களில் உழவாரப் பணி செய்து செடி, கொடி மற்றும் மரங்கள் அகற்றப்பட்டன. திருக்கோயில்களில் தொடர்ந்து இப்பணியைச் செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## குடமுழுக்கு

74. ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறையேனும் குடமுழுக்கு நடத்தப்பட வேண்டுமென்பது ஆகம விதி.

இதனடிப்படையில் திருக்கோயில்கள் 4 வகைகளாகப் பிரிக்கப்பட்டு திருப்பணிகள் செய்து குடமுழுக்கு நடத்தப்படுகின்றன.

- ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற மற்றும் நாயன்மார்களால் பாடப் பெற்ற பழைமை வாய்ந்த திருக்கோயில்கள்.
- வரலாற்று புகழ்பெற்ற மற்றும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்கள்.
- பிரார்த்தனை முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்கள்.
- கிராமப்புற திருக்கோயில்கள், பழங்குடியினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் வாழும் பகுதியில் அமைந்துள்ள சிறு திருக்கோயில்கள்.

**75. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களது ஆணையின்படி **2012–2013–ஆம்** ஆண்டில் **1906** திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்து குடமுழுக்கு செய்யப்பட்டது. இத்திட்டத்தை முனைப்புடன் செயல்படுத்த தனி கவனம் செலுத்தப்படுகிறது.

**திருக்குளத் திருப்பணியும் மழை நீர் சேகரிப்பும்**

**76.** இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டின் கீழுள்ள மொத்தத் திருக்கோயில்களில் **1586** திருக்கோயில்களுக்கு **2359** திருக்குளங்கள் உள்ளன. இவைகளில் **1068** திருக்குளங்கள் புனரமைப்புச் செய்ய வேண்டிய நிலையில் இருந்தன. இவ்வரசு பொறுப்பேற்றபின்பு **528** திருக்குளங்கள்

புனரமைப்பு செய்யப்பட்டன. எஞ்சிய திருக்குளங்கள் சீரமைப்பு மற்றும் மழை நீர் சேகரிப்புத் திட்டச் செயலாக்கம் படிப்படியாக விரைந்து நிறைவேற்றப்படும்.

77. இத்திட்டத்தின்படி திருக்குளங்களைப் பாதுகாத்துப் பேண கீழ்க்கண்டவாறு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

- திருக்குளங்களின் உள்ளும் புறமும் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்.
- திருக்குளங்களைச் சுற்றி சுற்றுச்சுவர் அமைத்தல்.
- தூர் எடுத்தல் மற்றும் ஆழப்படுத்துல்.
- திருக்குளங்களில் உள்ள படிகளைச் சீரமைத்தல்
- திருக்குளங்களுக்கு மழை நீர் வருவதற்கு வழி ஏற்படுத்துதல் மற்றும்

  உபரிநீர் வெளியேற்றுதல்

**பழைமையான திருக்கோயில்களின் கால பூஜைகளைப் புதுப்பித்தல்**

**78.** பாடல்பெற்ற மற்றும் மங்களாசாசனம் பெற்ற பழம்பெரும் திருக்கோயில்கள் நலிவுற்று, கால பூஜைகள் செய்வதில் தொய்வு ஏற்பட்டதைக் களைவதற்கு இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டது. நிதிவசதி மிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து முழு அளவிலான கால பூஜைகளைச் செய்திட இத்திட்டம் வழிவகை செய்கிறது. இதன் பயனாக **19** நிதி வசதி மிக்க திருக்கோயில்களிலிருந்து **50** நலிவுற்ற திருக்கோயில்களுக்கு **2001–2006**–இல் நிதியுதவி செய்யப்பட்டது. இத்திட்டம்

முந்தைய ஆட்சிக் காலத்தில் செயலற்ற நிலையில் இருந்தது. 2011–2012–ஆம் ஆண்டில் இச்சீர்மிகு திட்டத்திற்குப் புத்துயிர் அளித்து 39 நலிவுற்ற திருக்கோயில்களில் முழு அளவில் கால பூஜை நடைபெற நடவடிக்கை மேற்கொண்டதோடு 2012–2013–ஆம் ஆண்டிலும் தொடர்ந்து இந்நடவடிக்கை எடுக்கப்பட்டு ரூ.12.38 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.

**ஒரு கால பூஜைத் திட்டம்**

**79.** ஒரு கால பூஜை கூட செய்திட இயலாத நிதி வசதியற்ற திருக்கோயில்களுக்கு ஒரு கால பூஜை நடத்திட உதவும் வகையில் இத்திட்டம் 1986–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இச்சிறப்புமிகு திட்டத்தில் பொதுமக்களும் பங்கேற்கும் நோக்கில் 1993–ஆம் ஆண்டு **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள், திருக்கோயில் ஒன்றுக்கு பொதுமக்கள் நன்கொடையாக ரூ. 2.500/– வழங்க முன்வந்தால் நிதி வசதியுள்ள திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ.20,000/–மும் திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதியிலிருந்து ரூ.1,300/–ம் ஆலய மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.1,200/–ம் ஆக மொத்தம் ரூ. 25,000/– திருக்கோயில் பெயரில் முதலீடு செய்து அதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து அக்குறிப்பிட்ட திருக்கோயிலின் ஒரு கால பூஜையை நாள்தோறும் நடைபெற வழிவகை செய்தார்கள். இத்திட்டத்தின்படி 11,931 திருக்கோயில்கள் பயனடைந்தன.

**80.** நிதிப் பற்றாக்குறையால் இத்திட்டத்திற்கு ஏற்பட்ட முடக்கத்தை அறிந்து **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000/–ஆக இருந்த நிரந்தர வைப்புத் தொகையை

ரூபாய் ஒரு இலட்சமாக உயர்வு செய்து ஆணையிட்டார்கள். இதற்காகும் மொத்த செலவினத்தில் ரூ.59.48 கோடி அரசு நிதியிலிருந்து ஒருமுறை மானியமாகவும் 41 திருக்கோயில்களின் உபரிநிதியிலிருந்து ரூ.30 கோடி நிதிமாற்றம் மூலமும் ஒதுக்கீடு செய்து இத்திட்டத்திற்குப் புத்துயிர் அளிக்கப்பட்டது.

81. இதன் பயனாக ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் ஏற்படுத்தப்பட்ட வைப்பு நிதி ரூ.25,000/–ஐ ரூபாய் ஒரு இலட்சமாக உயர்வு செய்து 11,931 திருக்கோயில்களுக்கும் நிரந்தர வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வைப்பு நிதியிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து நாள்தோறும் தொய்வின்றி இத்திருக்கோயில்கள் அனைத்திலும் ஒரு கால பூஜை நடைபெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், 539 திருக்கோயில்களுக்கு இத்திட்டத்தை விரிவாக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தற்போது, ஒருகால பூஜை நடைபெறாத எவ்வொரு திருக்கோயிலுக்காவது எவரேனும் ரூ.10,000/– நன்கொடை அளித்தால் இத்துறை மூலம் ரூ.90,000/– அளித்து மொத்தம் ரூ. 1 இலட்சம் சம்பந்தப்பட்ட திருக்கோயில் பெயரில் வைப்பு நிதி உருவாக்கி அத்திருக்கோயிலுக்கு ஒருகால பூஜை நடைபெறுவதை உறுதி செய்யப்படும்.

## திருத்தேர் பராமரிப்பு

82. தமிழகத்திலுள்ள திருக்கோயில்களில் 809 திருக்கோயில்களுக்குச் சொந்தமாக 989 மரத் திருத்தேர்கள் உள்ளன. 2006–ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் திருக்கோயில்களின் உபரி நிதி மூலம்

திருத்தேர்கள் திருப்பணிக்காக ரூ. 11.17 கோடி வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டது. இவ்வரசு பொறுப்பேற்றபின் 78 திருத்தேர்களுக்கான சீரமைப்புப் பணிகள் நிறைவு செய்யப்பட்டு திருத்தேரோட்டங்கள் நடைபெற்றன.

83. இவ்வரசு பொறுப்பேற்றபின், திருத்தேர் திருப்பணியில் ஏற்பட்டிருந்த இடர்பாடுகளை அறிந்து மரத்தேர் சிற்பிகளின் ஊதியத்தை உயர்த்தியும் மரங்களுக்கான விலையை அதிகப்படுத்தியும் வழங்கப்பட்டது. இதன் பயனாக திருத்தேர் சீரமைப்பு விரைவுபடுத்தப்பட்டு சீரமைப்பு செய்ய வேண்டியதில் எஞ்சியுள்ள 225 திருத்தேர்களை விரைவில் சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

84. மேலும், திருத்தேர்களைப் பாதுகாக்கும் பொருட்டு தீப்பிடிக்காத தகடுகளால் ஆன கூரை, இரும்பு அச்சு, இரும்புச் சக்கரம் ஆகியவற்றை செய்யவும் திருத்தேர்களுக்கும் திருத்தேரோட்டத்தில் தேரை இழுக்கிறவர்களுக்கும் முன் எச்சரிக்கை நடவடிக்கையாக காப்பீடு செய்யப்படுகிறது.

85. இதைத் தவிர தேரோட்ட விழாவின்போது நடக்கும் விபத்துகளைத் தடுக்க பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

### தங்கரதமும் வெள்ளிரதமும்

86. பக்தர்கள் திருக்கோயில்களுக்கு வருகை தந்து தங்களது வேண்டுதலை நிறைவேற்ற உற்சவமூர்த்தியை தங்கரதத்திலோ

வெள்ளிரதத்திலோ எழுந்தருளச் செய்து இரதம் இழுப்பது நீண்டகால வழக்கத்தில் உள்ளது.

87. கீழ்க்காணும் 51 திருக்கோயில்களில் தங்கரதமும் 40 திருக்கோயில்களில் வெள்ளிரதமும் பக்தர்களின் பயன்பாட்டிற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளன.

| தங்கரதம் உள்ள திருக்கோயில்கள் விவரம் | |
|---|---|
| 1. | அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி |
| 2. | அருள்மிகு கந்தசுவாமி திருக்கோயில், பூங்காநகர், சென்னை |
| 3. | அருள்மிகு வடபழனியாண்டவர் திருக்கோயில், வடபழனி, சென்னை |
| 4. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி |
| 5. | அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு |
| 6. | அருள்மிகு சுவாமிநாத சுவாமி திருக்கோயில், சுவாமிமலை |
| 7. | அருள்மிகு வைத்தியநாத சுவாமி திருக்கோயில், வைத்தீஸ்வரன் கோயில் |
| 8. | அருள்மிகு விநாயகர் திருக்கோயில், ஈச்சநாரி, கோயம்புத்தூர் |
| 9. | அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம், திருச்சி |
| 10. | அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை |
| 11. | அருள்மிகு சங்கரநாராயண சுவாமி திருக்கோயில், சங்கரன் கோயில் |
| 12. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர் |
| 13. | அருள்மிகு வானமாமலைப் பெருமாள் திருக்கோயில், நாங்குநேரி |
| 14. | அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், காஞ்சிபுரம் |
| 15. | அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில், இரத்தினகிரி |

| | |
|---|---|
| 16. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், சிவன்மலை |
| 17. | அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில், மயிலாப்பூர், சென்னை |
| **தங்கரதம் உள்ள திருக்கோயில்கள் விவரம்** | |
| 18. | அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், மாங்காடு |
| 19. | அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம் |
| 20. | அருள்மிகு மதுரகாளியம்மன் திருக்கோயில், சிறுவாச்சூர் |
| 21. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், மருதமலை |
| 22. | அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், பண்ணாரி |
| 23. | அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில், திருவண்ணாமலை |
| 24. | அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில், திருவான்மியூர், சென்னை |
| 25. | அருள்மிகு வேலாயுதசுவாமி திருக்கோயில், திண்டல்மலை, ஈரோடு |
| 26. | அருள்மிகு அனந்தபத்மநாபசுவாமி திருக்கோயில், அடையாறு, சென்னை |
| 27. | அருள்மிகு கருநெல்லிநாதசுவாமி திருக்கோயில், திருத்தங்கல், சிவகாசி |
| 28. | அருள்மிகு முண்டகக்கண்ணியம்மன் திருக்கோயில், மயிலாப்பூர், சென்னை |
| 29. | அருள்மிகு வேங்கடாஜலபதி திருக்கோயில், ஒப்பிலியப்பன்கோயில், கும்பகோணம் |
| 30. | அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம் |
| 31. | அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், கரூர் |
| 32. | அருள்மிகு தண்டு மாரியம்மன் திருக்கோயில், கோயம்புத்தூர் |
| 33. | அருள்மிகு சந்திரசூடேஸ்வரர் திருக்கோயில், ஓசூர் |
| 34. | அருள்மிகு ஜெம்புகேசுவரர் மற்றும் அகிலாண்டேசுவரியம்மன் திருக்கோயில், திருவானைக்காவல் |
| 35. | அருள்மிகு ஆஞ்சநேய சுவாமி திருக்கோயில், நாமக்கல் |

| | |
|---|---|
| 36. | அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், பச்சைமலை, கோபிச்செட்டிபாளையம். |
| 37. | அருள்மிகு வெட்டுடையார் காளியம்மன் திருக்கோயில், அரியாக்குறிச்சி |
| 38. | அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதியம்மன் திருக்கோயில், திருநெல்வேலி |
| 39. | அருள்மிகு கண்ணுடைய நாயகியம்மன் திருக்கோயில், நாட்டரசன்கோட்டை, சிவகங்கை |
| 40. | அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில், திருச்செங்கோடு, சேலம் |
| 41. | அருள்மிகு வெக்காளியம்மன் திருக்கோயில், உறையூர், திருச்சிராப்பள்ளி |
| 42. | அருள்மிகு சுகவனேஸ்வரர் திருக்கோயில், சேலம். |
| 43. | அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில், சேலம் |
| 44. | அருள்மிகு முருகன்  திருக்கோயில், சோலைமலை மண்டபம், அழகர்கோயில், மதுரை |
| 45. | அருள்மிகு இலட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயில், சோளிங்கர், வேலூர் |
| 46. | அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவொற்றியூர், திருவள்ளூர் |
| 47. | அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில், திண்டுக்கல் |
| 48. | அருள்மிகு அங்காள பரமேஸ்வரி திருக்கோயில், மேல்மலையனூர், விழுப்புரம் |
| 49. | அருள்மிகு கொண்டத்துக் காளியம்மன் திருக்கோயில், பாரியூர், ஈரோடு |
| 50. | அருள்மிகு கந்தசுவாமி திருக்கோயில், திருப்போரூர், செங்கற்பட்டு, காஞ்சிபுரம் |
| 51. | அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில், ஆனைமலை, கோயம்புத்தூர் |

| வெள்ளி ரதம் உள்ள திருக்கோயில்கள் விவரம் | |
|---|---|
| 1. | அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழநி |
| 2. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர் |
| 3. | அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை |
| 4. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி |
| 5. | அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம் |
| 6. | அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை |
| 7. | அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயில், சுவாமிமலை |
| 8. | அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதி அம்மன் திருக்கோயில், திருநெல்வேலி |
| 9. | அருள்மிகு பாடலீஸ்வரர் திருக்கோயில், திருப்பாதிரிபுலியூர் |
| 10. | அருள்மிகு வைத்தியநாதசுவாமி திருக்கோயில், வைத்தீஸ்வரன் கோயில் |
| 11. | அருள்மிகு சட்டநாதசுவாமி திருக்கோயில், சீர்காழி |
| 12. | அருள்மிகு மயூரநாதசுவாமி திருக்கோயில், மயிலாடுதுறை |
| 13. | அருள்மிகு மாரியம்மன், அங்காளம்மன் திருக்கோயில், பொள்ளாச்சி |
| 14. | அருள்மிகு பிரசன்ன விநாயகர் திருக்கோயில், உடுமலைப்பேட்டை |
| 15. | அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு |
| 16. | அருள்மிகு கொளஞ்சியப்பர் திருக்கோயில், மணவாளநல்லூர் |
| 17. | அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில், காஞ்சிபுரம் |
| 18. | அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், காஞ்சிபுரம் |
| 19. | அருள்மிகு முத்துகுமாரசுவாமி திருக்கோயில், பார்க்டவுன், சென்னை |
| 20. | அருள்மிகு திருவேங்கடமுடையான் திருக்கோயில், அரியக்குறிச்சி |
| 21. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், குன்றக்குடி |

| | |
|---|---|
| 22. | அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், கீழச்செவல்பட்டி |
| 23. | அருள்மிகு கண்ணுடையநாயகியம்மன் திருக்கோயில், நாட்டரசன்கோட்டை |
| 24. | அருள்மிகு கொப்புடையநாயகியம்மன் திருக்கோயில், காரைக்குடி |
| 25. | அருள்மிகு நகரசிவன் என்ற மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், தேவகோட்டை |
| 26. | அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், கொன்னையூர், திருமயம் |
| 27. | அருள்மிகு ஆருத்ர கபாலீஸ்வரர் திருக்கோயில், ஈரோடு |
| 28. | அருள்மிகு சங்கமேஸ்வரர் திருக்கோயில், பவானி |
| 29. | அருள்மிகு பழனியாண்டவர் திருக்கோயில், பவானி |
| 30. | அருள்மிகு பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயில், ஆயக்குடி, திருநெல்வேலி |
| 31. | அருள்மிகு மதுரகாளியம்மன் திருக்கோயில், தொட்டியம் |
| 32. | அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், நெய்வேலி, பண்ருட்டி |
| 33. | அருள்மிகு வெயிலுக்கு உகந்த விநாயகர் திருக்கோயில், உப்பூர், இராமநாதபுரம் |
| 34. | அருள்மிகு சௌந்திரராஜ பெருமாள் திருக்கோயில், திண்டுக்கல் |
| 35. | அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், குமரக்கோட்டம், காஞ்சிபுரம் |
| 36. | அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், எட்டுக்குடி, நாகப்பட்டினம் |
| 37. | அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் மற்றும் தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், செட்டிக்குளம், பெரம்பலூர் |
| 38. | அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், காரைக்குடி, சிவகங்கை |
| 39. | அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில், மின்ட், சென்னை |
| 40. | அருள்மிகு கச்சபேஸ்வரர் திருக்கோயில், காஞ்சிபுரம். |

**அடிப்படை வசதிகள்**

**குடிநீர்**

**88.** திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு போதுமான அளவு சுத்தமான குடிநீர் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2012–2013–ஆம் ஆண்டில் 62 திருக்கோயில்களில் ரூ. 86 இலட்சம் செலவில் சுத்தமான குடிநீர் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**நவீன கழிப்பிட வசதி**

**89.** திருக்கோயில்களுக்கு வருகை தரும் ஆடவர்க்கும் மகளிர்க்கும் தனித்தனியாக நவீன கழிப்பிட வசதிகளைச் செய்து கொடுக்க 2012–2013–ஆம் ஆண்டில் நடவடிக்கை மேற்கொண்டு 12 திருக்கோயில்களில் ரூ.2.22 கோடி செலவில் ஆடவர்க்கு 87 கழிவறைகளும் மகளிர்க்கு 95 கழிவறைகளும் கட்டப்பட்டுள்ளன.

**தங்கும் வசதிகள்**

**90.** திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்கள் தங்குவதற்கு வசதியாக 2012–2013–ஆம் ஆண்டில் 2 திருக்கோயில்களில் ரூ.92 இலட்சம் செலவில் குடில்கள், கூடங்கள், அறைகள் வாகன நிறுத்த இடங்கள் கட்டப்பட்டுள்ளன.

**திருக்கோயில்களும் தூய்மையும்**

91. திருக்கோயில்களைத் தூய்மையாகப் பராமரிக்க வேண்டியது அவசியமாகும். இந்த தூய்மைப்பணி திருக்கோயில்களில் தனியார் நிறுவனங்கள் மூலம் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டதன் பயனாக 110 திருக்கோயில்கள் சிறந்த முறையில் தூய்மையாகப் பராமரிக்கப்படுகின்றன. பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் அதிகம் வருகை தரும் இதர திருக்கோயில்களில் இந்தத் திட்டத்தை விரிவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**புடவை / வேட்டி வழங்குதல்**

92. முக்கியத் திருக்கோயில்களில் காணிக்கையாகச் செலுத்தப்படும் பருத்தி நூல் புடவை மற்றும் வேட்டிகள், முதியோர், ஆதரவற்றோர் மற்றும் விதவைத் தாய்மார்களுக்கு, சுதந்திர தினத்தன்றும், அண்ணா நினைவு நாளன்றும் வழங்கப்படுகின்றன. 2012–2013–ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் மூலம் 1105 பேர் பயனடைந்துள்ளனர். ஆண்டுதோறும் மேற்கண்ட நாட்களில் மேலும் அதிக பயனாளிகள் பயன்பெறும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**உலோகத் திருமேனிகள் மற்றும் விலையுயர்ந்த பொருள்கள் பாதுகாப்பு**

93. திருக்கோயில்களுக்குச் சொந்தமான உலோகத் திருமேனிகள், ஆபரணங்கள் மற்றும் விலையுயர்ந்த பொருள்களைப் பாதுகாத்திட களவு எச்சரிக்கை மணி, கோள் சொல் கடிகாரம் , தொட்டிப் பூட்டு, இரும்பு வாயிற்கதவுகள், கண்காணிப்பு ஒளிப்படக் கருவிகள் ஆகியன பொருத்துதல், இரவுக் காவலர்கள் நியமனம், திருக்கோயில்கள் பாதுகாப்புப்படையினர்

நியமனம் ஆகிய நடவடிக்கைகள் 1200 திருக்கோயில்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**94.** திருக்கோயில்களுக்குச் சொந்தமான விலை மதிக்க இயலாத உலோகத் திருமேனிகளைப் பாதுகாக்கும் பொருட்டு உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பாதுகாப்பு வசதிகள் குறைவாக உள்ள திருக்கோயில்களில் உள்ள உலோகத் திருமேனிகள் இப்பாதுகாப்பு மையங்களில் வைத்து பாதுகாக்கப்படுகின்றன. திருவிழாக் காலங்களில் அவற்றை எடுத்துச் சென்று விழா முடிந்ததும் மீண்டும் பாதுகாப்பு மையத்தில் ஒப்படைப்பு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. பாதுகாப்பு மையத்தில் உள்ள அனைத்து உலோகத் திருமேனிகளுக்கும் பூஜைகள் செய்யப்படுகின்றன. உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு விவரம் பின்வருமாறு:

| உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம் | |
|---|---|
| 1. | திருவாரூர் சிலைகள் பாதுகாப்பு மையம் (அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில் வளாகம்) |
| 2. | அருள்மிகு அகிலாண்டேஸ்வரி உடனுறை ஜம்புகேஸ்வரர் திருக்கோயில், திருவானைக்காவல், திருச்சிராப்பள்ளி |
| 3. | அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதி அம்மன் திருக்கோயில், திருநெல்வேலி |
| 4. | அருள்மிகு சுகவனேசுவரர் திருக்கோயில், சேலம் |
| 5. | அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், காந்திநகர், வேலூர் |
| 6. | அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை |
| 7. | அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில், காஞ்சிபுரம் |
| 8. | அருள்மிகு பாடலீஸ்வரர் திருக்கோயில், திருப்பாதிரிபுலியூர், கடலூர் |

| | |
|---|---|
| 9. | அருள்மிகு நாகநாத சுவாமி திருக்கோயில், திருநாகேஸ்வரம், கும்பகோணம் |
| 10. | அருள்மிகு பட்டீஸ்வர சுவாமி திருக்கோயில், பேரூர், கோயமுத்தூர் |
| 11. | அருள்மிகு பிரகதாம்பாள் திருக்கோயில், திருகோகர்ணம், புதுக்கோட்டை |
| 12. | அருள்மிகு திருவாப்புடையார் திருக்கோயில், செல்லூர், மதுரை |
| 13. | அருள்மிகு சுந்தரராஜ பெருமாள் திருக்கோயில், சிவகங்கை |
| 14. | அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவாரூர் (கூடுதல் மையம்) |
| 15. | அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவொற்றியூர் |
| 16. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி |
| 17. | அருள்மிகு காளியம்மன் திருக்கோயில், அதியமான்கோட்டை, தர்மபுரி |
| 18. | அருள்மிகு ஆஞ்சநேயசுவாமி திருக்கோயில், விழுப்புரம் |
| 19. | அருள்மிகு நாச்சியார் (ஆண்டாள்) திருக்கோயில், ஸ்ரீவில்லிபுத்தூர், விருதுநகர் |

**திருக்கோயில் பாதுகாப்புப் படை**

**95.** திருக்கோயில்களில் உள்ள உலோகத் திருமேனிகள், பொன், வெள்ளி ஆபரணங்கள் மற்றும் விலை உயர்ந்த பொருட்கள், உண்டியல்கள் ஆகியவற்றின் பாதுகாப்புக்காக “**திருக்கோயில் பாதுகாப்புப்படை**” என்ற ஒரு தனிப்பிரிவு ஏற்படுத்தப்பட்டது. இதில் 1000 இரண்டாம் நிலை காவலர்கள், 3000 முன்னாள் படைவீரர்கள் ஆகியோரை நியமனம் செய்வதற்கு அரசு அனுமதி அளித்தது. 2005–2006–ஆம் ஆண்டுகளில் 1000 இரண்டாம் நிலை காவலர்களும் 2751 முன்னாள் படை வீரர்களும் பாதுகாப்பு படையில் பணிபுரிந்தனர். கடந்த ஆண்டுகளில் திருக்கோயில் பாதுகாப்பில் போதிய ஆர்வம் செலுத்தாததால் இந்த

எண்ணிக்கை தற்போது **703** காவலர்கள், **1874** முன்னாள் படைவீரர்கள் எனக் குறைந்து விட்டது. இதனை ஈடு செய்யும் வகையில் திருக்கோயில் பாதுகாப்புப் படையில் உள்ள முன்னாள் படை வீரர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த மாத தொகுப்பூதியம் ரூ.1,500/–லிருந்து ரூ.5000/–ஆக **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் தலைமையிலான அரசு உயர்த்தி வழங்கியது.

**கல்வி நிறுவனங்கள்**

**96.** திருக்கோயில்களில் இறைப்பணியோடு ஆன்மிக நெறிகளையும் பண்பாடு மற்றும் சமயக் கோட்பாடுகளையும் இளமையிலிருந்தே பயிற்றுவிக்கும் நோக்கோடு சமயம் மற்றும் பொதுக் கல்வி பயிற்றுவிக்க பள்ளிகளையும், கல்லூரிகளையும், பாடசாலைகளையும் திருக்கோயில் நிருவாகங்கள் பேணி வருகின்றன. அவைகள் பின்வருமாறு:

| வ.எண் | பள்ளி கல்லூரிகள் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கலை, பண்பாடு மற்றும் அறிவியல் கல்லூரிகள் | 5 |
| 2. | தொழில்நுட்பக் கல்லூரி | 1 |
| 3. | மேல் நிலைப்பள்ளிகள் | 15 |
| 4. | உயர்நிலைப் பள்ளிகள் | 8 |
| 5. | நடுநிலைப்பள்ளிகள் | 2 |
| 6. | தொடக்கப் பள்ளிகள் | 9 |
| 7. | மெட்ரிகுலேஷன் பள்ளி | 1 |
| 8. | மத்திய அரசுத் திட்ட மேனிலைப் பள்ளி | 1 |

| | | |
|---|---|---|
| 9. | நாதசுரம் தவில் – இசைப் பள்ளி | 2 |
| 10. | வேத ஆகமப் பாடசாலைகள் | 3 |
| 11. | தேவாரப் பாடசாலைகள் | 2 |
| 12. | காது கேளாதோர் மற்றும் பேச இயலாதோர் பள்ளி | 1 |
| | மொத்தம் | 50 |

**கல்வி நிறுவனங்கள் விவரப் பட்டியல்**

| **கலை, பண்பாடு மற்றும் அறிவியல் கல்லூரிகள்** | |
|---|---|
| 1. | அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி, பழனி, திண்டுக்கல் மாவட்டம் |
| 2. | அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி, பழனி, திண்டுக்கல் மாவட்டம் |
| 3. | ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம், திருநெல்வேலி மாவட்டம். |
| 4. | ஸ்ரீதேவி குமரி மகளிர் கல்லூரி, குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம் |
| 5. | பூம்புகார் கல்லூரி, மேலையூர், நாகப்பட்டினம் மாவட்டம் |

| **தொழில்நுட்பக் கல்லூரி** | |
|---|---|
| 1. | அருள்மிகு பழனியாண்டவர் பல்தொழில்நுட்பக் கல்லூரி, பழனி, திண்டுக்கல் மாவட்டம் |

| மேனிலைப்பள்ளிகள் | |
|---|---|
| 1. | அருள்மிகு பெரியநாயகியம்மன் மகளிர் மேனிலைப்பள்ளி, கோவிலூர், முத்துப்பேட்டை, திருவாரூர் மாவட்டம் |
| 2. | அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் மேனிலைப்பள்ளி, மருதமலை, வடவள்ளி, கோயம்புத்தூர் மாவட்டம் |
| 3. | அருள்மிகு வாழைத்தோட்டத்து அய்யன் மேனிலைப்பள்ளி, அய்யம்பாளையம், சாமளாபுரம், சோமனூர், திருப்பூர் மாவட்டம் |
| 4. | அருள்மிகு பேரூர் சாந்தலிங்க அடிகளார் மேனிலைப்பள்ளி, பேரூர், கோயம்புத்தூர் மாவட்டம் |
| 5. | அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் பெண்கள் மேனிலைப்பள்ளி, மதுரை, மதுரை மாவட்டம் |
| 6. | அருள்மிகு ஆண்டவர் சுப்பிரமணிய சுவாமி பெண்கள் மேனிலைப்பள்ளி, திருப்பரங்குன்றம், மதுரை மாவட்டம் |
| 7. | அருள்மிகு திருமலை குமாரசுவாமி தேவஸ்தான பெண்கள் மேனிலைப்பள்ளி, குற்றாலம், திருநெல்வேலி மாவட்டம் |
| 8. | தேவஸ்தான மேனிலைப்பள்ளி, மண்டைக்காடு, கன்னியாகுமரி மாவட்டம் |
| 9. | ஸ்ரீ காந்திமதி அம்பாள் மகளிர் மேனிலைப்பள்ளி, திருநெல்வேலி மாவட்டம் |
| 10. | டி.வேணுகோபால் செட்டி மேனிலைப்பள்ளி, சென்னை |
| 11. | இந்து மேனிலைப்பள்ளி, சென்னை |
| 12. | அருள்மிகு ஸ்ரீ பர்வதவர்தினி அம்பாள் பெண்கள் மேனிலைப்பள்ளி, இராமேஸ்வரம், இராமநாதபுரம் மாவட்டம் |
| 13. | அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரர் திருக்கோயில் மேனிலைப்பள்ளி, |

| | |
|---|---|
| | திருவெண்காடு, நாகப்பட்டினம் மாவட்டம் |
| 14. | ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் மேனிலைப்பள்ளி, மயிலம், திண்டிவனம், விழுப்புரம் மாவட்டம் |
| 15. | அருள்மிகு பராசக்தி வித்யாலயா மேனிலைப்பள்ளி, குற்றாலம், திருநெல்வேலி மாவட்டம் |

| உயர்நிலைப் பள்ளிகள் | |
|---|---|
| 1. | அருள்மிகு அஞ்சுவட்டத்தம்மன் மகளிர் உயர்நிலைப்பள்ளி, கீழ்வேளூர், திருவாரூர் மாவட்டம் |
| 2. | அருள்மிகு கலியுகவரதராஜப்பெருமாள் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, கல்லங்குறிச்சி, அரியலூர் மாவட்டம் |
| 3. | அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரர் திருக்கோயில் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, திருவெண்காடு, நாகப்பட்டினம் மாவட்டம் |
| 4. | அருள்மிகு சுந்தர்ராசா உயர்நிலைப்பள்ளி, அழகர்கோயில், மதுரை மாவட்டம் |
| 5. | தேவஸ்வம் உயர்நிலைப்பள்ளி, திற்பரப்பு, கன்னியாகுமரி மாவட்டம் |
| 6. | ஸ்ரீ திருஞான சம்பந்தர் உயர்நிலைப்பள்ளி, தருமபுரம், நாகப்பட்டினம் மாவட்டம் |
| 7. | அருள்மிகு முத்துக்குமாரசுவாமி தேவஸ்தான உயர்நிலைப்பள்ளி, சென்னை |
| 8. | தேவஸ்வம் உயர்நிலைப்பள்ளி, குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம் |

| நடுநிலைப் பள்ளிகள் |
|---|

| | |
|---|---|
| 1. | திருவாவடுதுறை ஆதீனம் நடுநிலைப்பள்ளி, திருவாவடுதுறை,<br>நாகப்பட்டினம் மாவட்டம் |
| 2. | திருவாவடுதுறை ஆதீனம் அம்பலவாண தேசிகர் நடுநிலைப்பள்ளி,<br>திருவாவடுதுறை, நாகப்பட்டினம் மாவட்டம் |

| **தொடக்கப் பள்ளிகள்** | |
|---|---|
| 1. | சுவாமி நெல்லையப்பர் அன்பு ஆசிரமம் தொடக்கப்பள்ளி,<br>பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம் |
| 2. | சங்கரநாராயண சுவாமி திருக்கோயில் தொடக்கப்பள்ளி, சங்கரன்கோயில்,<br>திருநெல்வேலி மாவட்டம் |
| 3. | ஸ்ரீ மெய்கண்டார் தொடக்கப்பள்ளி, திருவெண்காடு, நாகப்பட்டினம்<br>மாவட்டம் |
| 4. | அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் உதவிபெறும்<br>தொடக்கப்பள்ளி, பழனி, திண்டுக்கல் மாவட்டம் |
| 5. | திருவாடுதுறை ஆதினம் தொடக்கப்பள்ளி, திருவிடை மருதூர், தஞ்சாவூர்<br>மாவட்டம் |
| 6. | திருஞான சம்பந்தர் தொடக்கப்பள்ளி, தருமபுரம், நாகப்பட்டினம் மாவட்டம் |
| 7. | அருள்மிகு சுந்தரராசா தொடக்கப்பள்ளி, அழகர்கோயில், மதுரை மாவட்டம் |
| 8. | அஞ்சுகம் தொடக்கப்பள்ளி, கோடம்பாக்கம், சென்னை |
| 9. | பத்மாவதி கண்ணபிரான் தொடக்கப்பள்ளி, ஓட்டேரி, சென்னை |

| **மெட்ரிகுலேஷன் பள்ளி** | |
|---|---|
| 1. | பழனி ஆண்டவர் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப்பள்ளி, பழனி, திண்டுக்கல் |

| | |
|---|---|
| | மாவட்டம் |

| மத்திய அரசுத்திட்ட மேனிலைப் பள்ளி | |
|---|---|
| 1. | பராசக்தி வித்யாலயா, குற்றாலம், திருநெல்வேலி மாவட்டம் |

| நாதஸ்வரம், தவில் பயிற்சிப் பள்ளிகள் | |
|---|---|
| 1. | அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி, திண்டுக்கல் மாவட்டம் |
| 2. | அருள்மிகு நாகநாத சுவாமி திருக்கோயில், திருநாகேஸ்வரம், தஞ்சாவூர் மாவட்டம் |

| வேத ஆகமப் பாட சாலைகள் | |
|---|---|
| 1. | அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி, திண்டுக்கல் மாவட்டம் |
| 2. | அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருச்செந்தூர், தூத்துக்குடி மாவட்டம் |
| 3. | அருள்மிகு வைத்தியநாத சுவாமி திருக்கோயில், வைத்தீஸ்வரன்கோவில், நாகப்பட்டினம் மாவட்டம் |

| தேவாரப் பயிற்சிப் பள்ளிகள் | |
|---|---|
| 1. | தருமபுர ஆதீனம், தருமபுரம், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் மாவட்டம் |
| 2. | மருதநாயக முதலியார் அன்னபூரணி அம்மாள் டிரஸ்ட், கோயம்புத்தூர் மாவட்டம் |

| காது கேளாதோர் – பேச இயலாதோர் பள்ளி | |
|---|---|
| 1. | அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி, திண்டுக்கல் மாவட்டம் |

**சமூகநல நிறுவனங்கள்**

**97.** திருக்கோயில்கள் வழிபாட்டுத் தலங்கள் மட்டுமல்லாது சமூக நோக்கோடு அறநிலையங்களாகச் செயல்படுகின்றன. இதற்கு எடுத்துக்காட்டாக மருத்துவமனைகள், மனநலக் காப்பகங்கள், கருணை இல்லங்கள், முதியோர் இல்லங்கள் ஆகியன திருக்கோயில்களில் நிருவகிக்கப்படுகின்றன. இவைகளின் விவரம் பின்வருமாறு:

| சமூகநல நிறுவனங்கள் | | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கருணை இல்லங்கள் | 33 |
| 2. | மனநலக் காப்பகம் | 1 |
| 3. | முதியோர் இல்லங்கள் | 2 |
| 4. | சித்த வைத்தியசாலைகள் | 7 |
| 5. | ஆங்கில முறை மருத்துவமனைகள் | 2 |
| | மொத்தம் | 45 |

**கருணை இல்லங்கள்**

**98.** இந்து சமய அறநிலையத் துறையின் கீழுள்ள நிதி வசதிமிக்க திருக்கோயில்களில் ஆதரவற்ற சிறுவர் மற்றும் சிறுமியர்களுக்கு உணவு, இருப்பிடம், கல்வி ஆகிய உதவிகள் அளிப்பதோடு கருணையும், அன்பும் அளிக்கும் நோக்கத்துடன் கருணை இல்லங்கள் தொடங்கப்பட்டன. இத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 30 திருக்கோயில்களில் 33 கருணை இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. சிறுவர் காப்பகங்கள் 22ம், சிறுமியர் காப்பகங்கள் 11ம் உள்ளன. **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களால் கருணை இல்லங்களில் பயின்று +2 பள்ளிக் கல்வி முடித்து மேற்படிப்பு தொடரும் மாணவர்களுக்கு இந்து சமய அறநிலையத் துறையின் கீழ் இயங்கும் கல்வி நிறுவனங்களில் முழுமையான கல்விக் கட்டண விலக்கும், இதர கல்வி நிறுவனங்களில் 50 சதவிகிதம் கல்விக் கட்டணம் திருக்கோயில் நிதியிலிருந்து படிப்பு முடியும் வரை வழங்கவும் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

99. 2012–2013–ஆம் நிதியாண்டில் அனைத்து கருணை இல்லங்களிலும் சிறுவர், சிறுமியருக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் முழுமையாக மேம்படுத்தப்பட்டுள்ளன.

**கருணை இல்லங்கள் விவரம்**

| | |
|---|---|
| 1. | அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு, திருவள்ளூர் மாவட்டம் |
| 2. | அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருத்தணி, திருவள்ளூர் மாவட்டம் |
| 3. | அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி, திண்டுக்கல் |

| | |
|---|---|
| | மாவட்டம் |
| 4. | அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம், திருச்சிராப்பள்ளி மாவட்டம் |
| 5. | அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை, மதுரை மாவட்டம் |
| 6. | அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருச்செந்தூர், தூத்துக்குடி மாவட்டம் |
| 7. | அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம், இராமநாதபுரம் மாவட்டம் |
| 8. | அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயில், வடபழனி, சென்னை மாவட்டம் |
| 9. | அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், மருதமலை, கோயம்புத்தூர் மாவட்டம் |
| 10. | அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், பண்ணாரி, ஈரோடு மாவட்டம் |
| 11. | அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில், அழகர்கோவில், மதுரை மாவட்டம் |
| 12. | அருள்மிகு லட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயில், சோளிங்கர், வேலூர் மாவட்டம் |
| 13. | அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை, திருவண்ணாமலை மாவட்டம் |
| 14. | அருள்மிகு சுவாமிநாத சுவாமி திருக்கோயில், சுவாமிமலை, தஞ்சாவூர் மாவட்டம் |
| 15. | அருள்மிகு சுகவனேஸ்வரர் திருக்கோயில், சேலம், சேலம் மாவட்டம் |

| | |
|---|---|
| 16. | அருள்மிகு வனபத்ர காளியம்மன் திருக்கோயில், தேக்கம்பட்டி, கோயம்புத்தூர் மாவட்டம் |
| 17. | அருள்மிகு வாழைத்தோட்டத்து அய்யன் திருக்கோயில், அய்யம்பாளையம், திருப்பூர் மாவட்டம் |
| 18. | அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம், மதுரை மாவட்டம் |
| 19. | அருள்மிகு வெங்கடாசலபதிசுவாமி திருக்கோயில், ஒப்பிலியப்பன் கோயில், தஞ்சாவூர் மாவட்டம் |
| 20. | அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில், திருநாகேஸ்வரம், தஞ்சாவூர் மாவட்டம் |
| 21. | அருள்மிகு மகுடேஸ்வரசுவாமி வீரநாராயணப் பெருமாள் திருக்கோயில், கொடுமுடி, ஈரோடு மாவட்டம் |
| 22. | அருள்மிகு விநாயகர் திருக்கோயில், ஈச்சனாரி, கோயம்புத்தூர் மாவட்டம் |
| 23. | அருள்மிகு பட்டீஸ்வர சுவாமி திருக்கோயில், பேரூர், கோயம்புத்தூர் மாவட்டம் |
| 24. | அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில், ஆனைமலை, கோயம்புத்தூர் மாவட்டம் |
| 25. | அருள்மிகு கொப்புடைய நாயகி அம்மன் திருக்கோயில், காரைக்குடி, சிவகங்கை மாவட்டம் |
| 26. | அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், சிவன்மலை, ஈரோடு மாவட்டம் |
| 27. | அருள்மிகு அடைக்கலம் காத்த அய்யனார் மற்றும் பத்ரகாளியம்மன் திருக்கோயில், மடப்புரம், சிவகங்கை மாவட்டம் |

| | |
|---|---|
| 28. | அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதி அம்மன் திருக்கோயில், திருநெல்வேலி, திருநெல்வேலி மாவட்டம் |
| 29. | அருள்மிகு முத்துக்குமார சுவாமி தேவஸ்தானம், சென்னை |
| 30. | அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், தாயமங்கலம், சிவகங்கை மாவட்டம் |

| மனநலக் காப்பகம் | |
|---|---|
| 1. | அருள்மிகு பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருக்கோயில், குணசீலம், திருச்சிராப்பள்ளி மாவட்டம் |

| முதியோர் இல்லங்கள் | |
|---|---|
| 1. | அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி, திண்டுக்கல் மாவட்டம் |
| 2. | அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம், மதுரை மாவட்டம் |

| சித்த வைத்தியசாலைகள் | |
|---|---|
| 1. | அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி, திண்டுக்கல் மாவட்டம் |
| 2. | அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயில், வடபழனி, சென்னை |
| 3. | அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், மருதமலை, கோயம்புத்தூர் மாவட்டம் |
| 4. | அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருத்தணி, திருவள்ளூர் |

| | |
|---|---|
| | மாவட்டம் |
| 5. | அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம், மதுரை மாவட்டம் |
| 6. | அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருச்செந்தூர், தூத்துக்குடி மாவட்டம் |
| 7. | அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம், இராமநாதபுரம் மாவட்டம் |

| ஆங்கில முறை மருத்துவமனைகள் | |
|---|---|
| 1. | அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி, திண்டுக்கல் மாவட்டம் |
| 2. | அருள்மிகு கற்பக விநாயகர் திருக்கோயில், பிள்ளையார்பட்டி, சிவகங்கை மாவட்டம் |

**பள்ளி, கல்லூரிகளுக்கு அடிப்படை வசதிகள்**

**100.** இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின் கீழ் இயங்கும் பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் அடிப்படை வசதிகள் செய்வதற்கு ஏதுவாக நிதி வசதியுள்ள திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து நிதிமாற்றம் மூலம் தனித்தனியே ரூ.5 கோடி வீதம் இரண்டு மூலதன நிதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த மூலதன நிதியிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையில் ஆண்டுதோறும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு தேவையான கட்டடங்கள், ஆய்வுக்கூடங்கள், நூலகங்கள், கணினிகள், குடிநீர், கழிப்பறை போன்ற வசதிகளைச் செய்திட நிதி உதவி வழங்கப்படுகிறது.

101. 2012–2013–ஆம் ஆண்டில் 5 கல்வி நிறுவனங்களுக்கு இம்மைய நிதியிலிருந்து ரூ.31.20 இலட்சமும் திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ.17.29 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

**கோசாலைகள்**

102. திருக்கோயில்களுக்குக் காணிக்கையாக வரப்பெறும் கால்நடைகளைப் பராமரிக்க ஒருங்கிணைந்த கோசாலைகள் பழனி, திருச்செந்தூர், ஸ்ரீரங்கம், இராமேசுவரம் ஆகிய நான்கு இடங்களில் உள்ளன.

103. திருக்கோயில்களுக்கு உபயமாக பெறப்படும் உபரி கால்நடைகள் மகளிர் சுயஉதவி குழுக்களுக்கும், திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்களுக்கும் பூசாரிகளுக்கும் விலையின்றி வழங்கப்படுகின்றன. திருக்கோயில்களில் இருக்கும் கோசாலைகளை நல்ல முறையில் பேணுவதற்கு சிறப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**திருக்கோயிலும் தமிழும்**

104. ஆழ்வார்களும், நாயன்மார்களும், அருளார்ந்த துறவிகளும் தாங்கள் சென்ற இடமெல்லாம் இறைவனைச் செந்தமிழால் போற்றிப் பாடி வணங்கியுள்ளனர். அத்தகைய அருளாளர்கள் அருளிய தேவாரம், திருவாசகம்,

திருமந்திரம், திருப்புகழ், நாலாயிர திவ்வியபிரபந்தம் ஆகியவை தமிழ் மொழி வளர்ந்து செழித்தோங்கிட துணையாக அமைந்துள்ளன. திருக்கோயில்களில் விரும்புவோருக்கு தமிழில் வழிபாடு செய்வதை நெறிபடுத்துவதற்கும் ஊக்குவிப்பதற்கும் ''போற்றி'' (அர்ச்சனை) நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

**அருளாளர்கள் விழா**

**சேக்கிழார் விழா**

**105.** இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் தெய்வச் சேக்கிழார் பிறந்த இடமான சென்னை, குன்றத்தூரில் சேக்கிழார் திருநட்சத்திரத்தன்று ஆண்டுதோறும் சேக்கிழார் விழா அரசு விழாவாக கொண்டாடப்படுகிறது. சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலிலும் ஆகஸ்டுத் திங்கள்தோறும் 12 நாட்களுக்கு பன்னிரு திருமுறை விழாவும் சேக்கிழார் விழாவும் கொண்டாடப்படுகின்றன.

**திருஞானசம்பந்தர் இசை விழா**

**106.** இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் திருஞானசம்பந்தரைப் போற்றும் வகையில் திருக்கழுக்குன்றம், அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயிலில் ஞானசம்பந்தர் இசைவிழா ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது. இதற்கான செலவு ஆணையரின் பொது நல நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுகிறது.

**ஔவையார் விழா**

**107.** நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், துளசியாப்பட்டினம் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு விசுவநாதசுவாமி திருக்கோயில் வளாகத்தில் தமிழ் மூதாட்டி ஔவையார் கோயில் கொண்டுள்ளார். இத்திருக்கோயிலில் ஆண்டுதோறும் இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் பங்குனி மாதம் ‘‘சதய’’ நட்சத்திரத்தன்று “ஔவையார் விழா’’ கொண்டாடப்படுகிறது.

**தாயுமானவர் விழா**

**108.** தமிழ் ஞானப் பாடல்களைத் தமிழ் உலகிற்கு அளித்த தாயுமான அடிகளைப் போற்றும் வகையில் இத்துறை சார்பாக தாயுமானவர் விழா திருச்சிராப்பள்ளி, மலைக்கோட்டை, அருள்மிகு தாயுமானசுவாமி திருக்கோயிலில் ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது. இங்கு தட்சிணாமூர்த்தியை பூஜித்து விட்டுத் திரும்பும்போது திருமூலர் வழிவந்த மௌன குருசாமியால் ஈர்க்கப்பட்டார்.

**திருவள்ளுவர் திருநாள்**

**109.** ஒவ்வொரு ஆண்டும் தைத்திங்கள் இரண்டாம் நாளன்று சென்னை, மயிலாப்பூரில் அமைந்துள்ள தெய்வப்புலவர் திருவள்ளுவர் திருக்கோயிலில் திருவள்ளுவர் திருநாள் கொண்டாடப்படுகிறது.

இவ்விழாவின்போது பள்ளி மாணவர்களுக்கு பேச்சுப்போட்டி, ஒப்பித்தல் போட்டி, கட்டுரைப்போட்டி நடத்தப் பெற்று பரிசுகள் வழங்கப்படுகின்றன. மேலும் கருத்தரங்கங்களும் பட்டி மன்றங்களும் நடத்தப்படுகின்றன.

**அருளாளர் அருணகிரிநாதர் விழா**

**110.** அருளாளர் அருணகிரிநாதருக்கு திருவண்ணாமலை, அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயிலில் ஆவணி மாதம், ''கேட்டை'' நட்சத்திரத்தன்று ''முக்திப்பேறு விழா'' திருக்கோயில் சார்பில் ஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

**செங்கட்சோழ நாயனார் விழா**

**111.** திருச்சி மாவட்டம், திருவானைக்காவல், அருள்மிகு ஜம்புகேஸ்வரர் அகிலாண்டேஸ்வரி திருக்கோயிலில் **63** நாயன்மார்களில் ஒருவரான அருள்திரு செங்கட்சோழ நாயனார் அவதரித்த திருநாளான மாசி மாதத்தில், ''சதய'' நட்சத்திரத்தன்று ஆண்டுதோறும் "செங்கட்சோழ நாயனார் விழா" கொண்டாடப்படுகிறது.

**ஆழ்வார்கள் விழா**

**112.** பன்னிரு ஆழ்வார்களுக்கும் திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயிலில் ஆண்டுதோறும் ''ஆழ்வார்கள் விழா'' சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

**பாவை விழா**

**113.** ஆண்டுதோறும் மார்கழித் திங்களில் திருப்பாவை, திருவெம்பாவை ஒப்புவித்தல் போட்டிகள் திருக்கோயில்களில் நடத்துவது வழக்கத்தில் உள்ளது. **2012–2013–**ஆம் ஆண்டு மார்கழித்திங்கள் திருப்பாவை மற்றும் திருவெம்பாவை விழாவை பாவை விழாவாக திருக்கோயில்களில் வழக்கம்போல் நடத்தப்படுவது மட்டும் அல்லாது மாவட்ட அளவில் விழா ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு **32** மாவட்டங்களில் **4309** மாணவ மாணவியர் பங்கேற்புடன் **900** மாணவ மாணவியருக்கு பரிசுகள் வழங்கி பாவை விழா வெகு சிறப்புடன் நடத்தப்பட்டது.

**தமிழ்ப் புத்தாண்டு விழா**

**114. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் சட்ட திருத்தத்தால் நெடுங்காலமாக தமிழ் மக்களின் நம்பிக்கை மரபு வழி வந்த முறைகளை மதித்து சித்திரைத் திங்கள் முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு **13.4.2012** அன்று உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்களால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

**115.** தமிழ்ப் புத்தாண்டு தினத்தை ஒட்டி **14.4.2013** அன்று அனைத்து திருக்கோயில்களிலும் சிறப்பு பூசை வழிபாடுகளும் சிறப்பு அன்னதானமும் சமய சொற்பொழிவுகளும் கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. அன்றைய தினம் திருக்கோயில்கள் வாழை, மாவிலைத் தோரணங்களுடன் மின் விளக்குகளால்

அலங்கரிக்கப்பட்டன. தமிழ்ப் புத்தாண்டை ஒட்டி திருக்கோயில்களில் பஞ்சாங்கம் வாசிக்கப்பட்டது.

**தலவரலாறும் தலபுராணமும்**

**116.** திருக்கோயில்களின் தொன்மை, வரலாறு, கட்டடக் கலை, கல்வெட்டுச் செய்திகள், வழிபாட்டுச் சிறப்புகள் ஆகியவற்றை மக்கள் அறியும் வண்ணம் தலவரலாறு நூல்களும், திருக்கோயிலையும் திருக்கோயில் அமைந்துள்ள ஊரையும் உள்ளடக்கிய தலபுராண நூல்களும் வெளியிடப்படுகின்றன. பிற திருக்கோயில்களுக்கும் அவற்றின் வழிபாட்டுச் சிறப்புகளை அறிந்து கொள்ள ஏதுவாக தகவலட்டைகள் அச்சிட்டு வெளியிடப்படுகின்றன. தலவரலாறு மற்றும் தல புராண நூல்களை மறு வெளியீடு செய்யவும், புதுப்பிக்கவும் விரைவு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**பயணியர் கையேடுகள்**

**117.** பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் ஒவ்வொரு பகுதியிலும் உள்ள திருக்கோயில்கள் பற்றிய விவரங்களை அறிந்து கொள்ள ஏதுவாக, முக்கியமான நகரங்களில் உள்ள திருக்கோயில்கள் மற்றும் அதன் சுற்றுப்புறத்திலுள்ள திருக்கோயில்கள் தொடர்பான விவரங்களைச் சேகரித்து காஞ்சிபுரம், கும்பகோணம், தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை, கரூர், பெரம்பலூர், மதுரை, திண்டுக்கல், தேனி, கோவை, நீலகிரி, சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி, சிவகங்கை, இராமநாதபுரம் ஆகிய முக்கிய நகரங்களில் பயணியர் கையேடுகள்

வெளியிடப்பட்டன. இடைக்காலத்தில் இந்த நடவடிக்கைகள் கைவிடப்பட்டன. இத்தகைய கையேடுகள் பக்தர்களுக்கும், சுற்றுலா பயணிகளுக்கும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வழிகாட்டி என்பதைக் கருத்தில் கொண்டு இவைகளை மறுபதிப்பு செய்து வெளியிடவும், மாவட்டந்தோறும் புதிய கையேடுகள் வெளியிடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**‘‘திருக்கோயில்’’– திங்களிதழ்**

**118. 1958–**ஆம் ஆண்டு முதல் இந்து சமய அறநிலையத் துறையால் ‘‘திருக்கோயில்’’ என்ற பெயரில் திங்களிதழ் வெளியிடப்பட்டு வருகிறது. தற்போது இந்த மாத இதழ் தலைசிறந்த எழுத்தாளர்களின் கட்டுரைகளுடன் எழில்மிகு வகையில் வெளியிடப்படுகிறது.

**ஆகம நூல்களையும் இதர நூல்களையும் தமிழில் வெளியிடுதல்**

**119.** வடமொழி ஆகம சாத்திர நூல்களையும், சிற்ப சாத்திர நூல்களையும் தமிழர்கள் அறிந்து கொள்ளும் வகையில் தமிழில் மொழியாக்கம் செய்து வெளியிடப்பட்டன. அதன் முதற்கட்டமாக உத்ரகாமிக ஆகம நூல், ஆலய நிர்மாண பிம்பலட்சண சிற்பநூல், குமார தந்திரம் ஆகிய நூல்கள் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டன. மேலும் ‘‘இந்து மத இணைப்பு விளக்கம்’’, ‘‘சைவமும் வைணவமும்’’ போன்ற தமிழ் நூல்கள் மறுபதிப்பு செய்து வெளியிடப்பட்டன. இந்நூல்கள் தேவையின்போது மறுபதிப்பு செய்து வெளியிடப்படும்.

**அங்கீகரிக்கப்பட்ட பட்டியல் பொறியாளர்கள்**

**120.** திருக்கோயில்களின் திருப்பணிகளை மேற்கொள்வதற்கான மதிப்பீடுகள் தயாரித்தளிப்பதில் தாமதம் ஏற்படுவதைக் கருத்தில் கொண்டு, பொதுப் பணித் துறையிலும் நெடுஞ்சாலைத் துறையிலும் பணியாற்றி ஓய்வு பெற்ற பொறியாளர்களை தகுதியின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட பட்டியல் பொறியாளர்களாக அங்கீகரித்து திருக்கோயில்களை சீரமைப்பதற்குரிய கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான வரைபடங்கள், மதிப்பீடுகள் தயார் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**ஸ்தபதிகள்**

**121.** சிற்ப சாத்திர மற்றும் ஆகம சாத்திர விதிகளில் வரையறுக்கப்பட்டபடி திருக்கோயில்களில் நடைபெறும் திருப்பணிகள் நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில், தம் முன்னோர் மூலம் வழிவழியாக இக்கலையை நன்கு கற்றறிந்தோர், சிற்ப சாத்திரக்கலையில் பட்டம் அல்லது பட்டயம் பெற்றுள்ளோர் ஆகியோர் தகுதி மற்றும் திறமையின் அடிப்படையில் ஸ்தபதிகளாக அங்கீகாரம் செய்யப்படுகின்றனர்.

**புத்தொளிப் பயிற்சித் திட்டம்**

**122.** திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள், ஓதுவார்கள் தங்கள் பணிகளைத் திறம்பட செய்திட

ஏதுவாக 1991–ஆம் ஆண்டு ‘‘புத்தொளிப் பயிற்சித் திட்டம்’’ தொடங்கப்பட்டு சிறப்பாக நடைபெற்றது. முக்கியத் திருக்கோயில்களைத் தெரிவு செய்து 2002–ஆம் ஆண்டு முதல் புத்தொளிப் பயிற்சித் திட்டம் செயற்படுத்தப்பட்டு 488 நபர்கள் பயிற்சி பெற்றனர். இத்திட்டம் கடந்த அரசு காலத்தில் கைவிடப்பட்டது. இத்திட்டத்தின் முக்கியத்துவம் உணர்ந்து அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள், ஓதுவார்கள் பயன்பெறும் வகையில் மீண்டும் புத்தொளிப் பயிற்சித் திட்டம் முதற்கட்டமாக 2011–2012 ஆண்டில் 6 வார காலத்திற்கு புத்தொளிப் பயிற்சி அளிக்கப்பட்டதில் 1011 பணியாளர்கள் பயனடைந்தனர். 2012–2013–ஆம் ஆண்டில் நவம்பர் மாதத்தில் இரண்டாம் கட்டமாக 6 வார காலத்திற்கு புத்தொளிப் பயிற்சி அளிக்கப்பட்டதில் 1459 பணியாளர்கள் பயனடைந்தனர். இப்பயிற்சி ஆண்டுதோறும் நடைபெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**மனித நேயப் பயிற்சி**

123. திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களின் இறையுணர்வை மதித்து வழிபாட்டு முறைகளைக் கனிவோடு செய்திட திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள் உள்ளிட்ட அனைத்துப் பணியாளர்களுக்கும் பயிற்சியளிக்க திட்டமிடப்பட்டு முக்கியத் திருக்கோயில்களின் 3359 பணியாளர்களுக்கு 18 மையங்களில் மனித நேயப் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சி ஆண்டுதோறும் அனைத்துத் திருக்கோயில் பணியாளர்களுக்கும் அளிக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**திருக்கோயில்களில்  இசைவாணர் நியமனம்**

**124.** திருக்கோயில்களில் திருவிழாக்களின்போது மங்கள இசை இசைக்கப்படுவது வழக்கம். இவ்வழக்கம் திருக்கோயில்களின் நிதிப் பற்றாக்குறை காரணமாகக் குறைந்து வருவதைக் கருத்தில் கொண்டு ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற மற்றும் நாயன்மார்களால் பாடல்பெற்ற புகழ்வாய்ந்த தொன்மையான திருக்கோயில்களில் நாதசுரம், தவில், தாள இசைவாணர்களை நியமனம் செய்து அவர்களுக்கு முறையே ரூ.1,500/–, ரூ.1,000/– மற்றும் ரூ.750/– வீதம் மாத ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கென ஒரு கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டு அதிலிருந்து கிடைக்கும் வட்டித்தொகை மூலம் அவர்களுக்கு இவ்வூதியம் வழங்கப்படுகிறது.

**திருக்கோயில் பணியாளர்கள் நலத்திட்டங்கள்**

**125.** இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களின் பணியாளர்கள் பல்வேறு பதவிகளில் பணிபுரிகின்றனர். இவர்களது நலன் காத்திட ஏற்படுத்தப்பட்ட திட்டங்கள் வருமாறு:

| | **நலத்திட்ட விவரம்** |
|---|---|
| 1. | பணியாளர்கள் சேமநல நிதித்திட்டம் |
| 2. | துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டம் |
| 3. | குடும்ப நல நிதித் திட்டம் |
| 4. | சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம் |
| 5. | திருக்கோயில் பணியாளர்கள் நல நிதித் திட்டம் |

| | |
|---|---|
| 6. | அர்ச்சகர், ஓதுவார், வேதபாராயணர், அரையர், திவ்விய பிரபந்தம் பாடுவோர், இசைக்கலைஞர் ஆகியோருக்கு ஓய்வூதியத் திட்டம் |
| 7. | திருமணம், பண்டிகைகள் மற்றும் வாகனம் வாங்குவதற்கு முன்பணம் |
| 8. | கருணை அடிப்படையில் வாரிசுதாரர்களுக்கு வேலை அளித்தல் |
| 9. | குடமுழுக்கு ஊக்கத் தொகை |
| 10. | ஆண்டுத் திருவிழாக் காலங்களில் கூடுதல் நேரப் பணி ஊக்கத் தொகை |
| 11. | பொங்கல் கருணைத் தொகை |
| 12. | உயர் கல்வி பயிலும் திருக்கோயில் பணியாளரின் மகன்/மகளுக்கு நிதியுதவி |
| 13. | திருக்கோயில் பணியாளர்களுக்குச் சீருடைகளும் அடையாள அட்டைகளும் வழங்குதல் |
| 14. | திருக்கோயில் பணியாளர்களுக்குக் கணினி பயிற்சி அளித்தல் |
| 15. | ஒரு கால பூஜை நடைபெற்று வரும் திருக்கோயில் பூசாரி/அர்ச்சகர்களுக்கு இலவச மிதிவண்டி வழங்குதல் |

**குடும்ப நல நிதி**

126. பணியிலிருக்கும்போது மரணமடையும் திருக்கோயில் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்காக “குடும்ப நல நிதித் திட்டம்” ஏற்படுத்தப்பட்டது. உபரி நிதியிலிருந்து இதற்கென ரூ.15 கோடியில் மைய நிதி உருவாக்கப்பட்டு, அதிலிருந்து கிடைக்கப்பெறும் வட்டித்தொகையிலிருந்து இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்படி, மரணமடையும் பணியாளரின் வாரிசுதாரருக்கு ரூபாய் ஒரு இலட்சம் உதவித்தொகை

வழங்கப்படுகிறது. 2012–2013–ஆம் ஆண்டில் 119 வாரிசுதாரர்களுக்கு ரூ. 121.85 இலட்சம் வழங்கப்பட்டது.

**சிறப்பு சேம நல நிதித் திட்டம்**

127. ரூபாய் ஒரு இலட்சமும் அதற்கு மேலும் ஆண்டு வருமானம் பெறும் திருக்கோயில்களின் பணியாளர்களின் நலனுக்காக "சிறப்பு சேம நல நிதித் திட்டம்" ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்திற்கென திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ. 50 இலட்சத்தைக் கொண்டு மைய நிதி ஏற்படுத்தப்பட்டது. ஒவ்வொரு திருக்கோயில் பணியாளரும் ஓய்வுபெறும்போது அவரது பணிநாளில் செலுத்திய மொத்த சந்தாத் தொகையுடன் இத்திட்டத்தின் மூலம் கிடைக்கும் பணிக்கொடை ரூ.5,000/–மும் சேர்த்து வழங்கப்படுகிறது. 2012–2013–ஆம் ஆண்டில் 70 ஓய்வுப் பெற்ற பணியாளர்களுக்கு ரூ.3.42 இலட்சம் இத்திட்ட மையநிதியிலிருந்து வழங்கப்பட்டது.

**திருக்கோயில் ஊழியர் நல நிதி**

128. ஆண்டு வருவாய் ரூபாய் ஒரு இலட்சத்திற்கும் குறைவாக உள்ள திருக்கோயில்களில் பணிபுரியும் பணியாளர்களில் ரூ.750/–க்கும் குறைவாக மாதச் சம்பளம் பெறுகின்றவர்களின் சம்பள நிலுவைத் தொகையை வழங்குவதற்காக, திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ.5 கோடி மைய நிதியுடன் "திருக்கோயில் ஊழியர் நல நிதித் திட்டம்" செயல்படுகிறது. இந்த மைய நிதியிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து மேற்கண்ட பணியாளர்களின் சம்பள நிலுவைத் தொகை வழங்கப்படுகிறது. 2012–2013–

ஆம் ஆண்டில் 871 திருக்கோயில்களில் பணிபுரியும் 1132 பணியாளர்களுக்கு ரூ. 55.26 இலட்சம் சம்பள பாக்கி வழங்கப்பட்டது.

**கருணை அடிப்படையில் வாரிசுதாரர்களுக்கு வேலைவாய்ப்பு**

129. திருக்கோயில்களில் பணியாற்றும்போது, இயற்கை எய்தும் திருக்கோயில் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு ‘‘கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு’’ வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2012–2013–ஆம் ஆண்டில் 34 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டது.

**ஓய்வூதியத் திட்டம்**

**அ. அர்ச்சகர், ஓதுவார், வேதபாராயணர், அரையர், திவ்விய பிரபந்தம் பாடுவோர், இசைக் கலைஞர்கள்**

130. திருக்கோயில்களில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து 60 வயது நிறைவடைந்து ஓய்வுபெற்ற அர்ச்சகர்கள், ஓதுவார்கள், வேதபாராயணர்கள், அரையர்கள், திவ்விய பிரபந்தம் பாடுவோர், இசைக்கலைஞர்கள் ஆகியோருக்கு அரசு நிதியிலிருந்து இத்துறை மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ.750/– ஓய்வூதியம் வழங்கப்பட்டது.

**131. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ரூ.750/– மாத ஓய்வூதியத்தை ரூ.1,000/– ஆக உயர்த்தி வழங்கிட ஆணையிட்டுள்ளார்கள். இதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு கூடுதலாக ரூ.14.49 இலட்சம் செலவிடப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் மொத்தம் 442 பணியாளர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

இத்திட்டத்தின் மூலம் பயன்பெறும் பயனாளிகள் விவரம் வருமாறு:

| | **ஓய்வூதியம் பெறும் கலைஞர்கள்** | **அரசால் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை** | **பயனாளிகளின் மொத்த எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 1. | ஓதுவார் | 125 | 34 |
| 2. | வேதம், பிரபந்தம், மற்றும் அரையர் | 59 | 9 |
| 3. | இசைக் கலைஞர்கள் | 125 | 62 |
| 4. | அர்ச்சகர் (சைவம் மற்றும் வைணவம்) | 691 | 337 |
| | **மொத்தம்** | **1000** | **442** |

**ஆ. கிராமப்புற பூசாரிகள்**

**132.** இத்துறையின் நேரடி ஆளுகையின் கீழ் கொண்டு வரப்படாத திருக்கோயில்களில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து 60 வயதினை நிறைவு செய்து ஓய்வு பெற்ற பூசாரிகளுக்கு கிராமப்புற பூசாரிகள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் மாதம் ஒன்றுக்கு ரூ.750/– வீதம் 2819 கிராமக் கோயில் பூசாரிகளுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

**இ. திருக்கோயில் பணியாளர்கள்**

**133.** திருக்கோயில் பணியாளர்களுக்கென இருவகை ஓய்வூதியத் திட்டங்கள் 2006–ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**i. பணியாளர்கள் சேமநலநிதித் திட்டம்**

**134.** திருக்கோயில்களில் பணிபுரியும் அனைத்துப் பணியாளர்களுக்கும் இந்தத் திட்டம் பொருந்தும். திருக்கோயில் பணியாளர்களில், ஓய்வு பெற 10 ஆண்டிற்கு மேல் பணிக்காலம் உள்ளவர்களுக்கு, பணியாளர் சேமநல நிதி திட்டத்தின் (Employees Provident Fund) மூலம் 1.3.2006 முதல் ஓய்வூதியமும் குடும்ப ஓய்வூதியமும் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**ii. துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டம்**

135. நிதிவசதி குறைவாகவும், பணியாளர்களின் எண்ணிக்கை குறைவாகவும் உள்ள திருக்கோயில் பணியாளர்களுக்கும், பணியாளர் சேமநல நிதித் திட்டம் கொண்டு வரப்பட்ட நாளில் (1.3.2006) ஓய்வு பெற 10 ஆண்டிற்கு கீழ் பணிக்காலம் உள்ளவர்களுக்கும், பணியாளர் சேம நல நிதித்திட்டத்தில் சேரும் அளவு வசதியில்லாத கோயில்களில் உள்ளவர்களுக்கும் துறை நிலையிலான ஓய்வூதியம் பெறும் திட்டம் 2006–ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.

136. இந்தத் துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டத்தின் (Departmental Pension Scheme) கீழ் ஓய்வூதியம் அளிப்பதற்கு ஏதுவாக, நிதிவசதிமிக்க திருக்கோயில்களிலிருந்து ரூ.50 கோடி உபரிநிதியினைப் பெற்று மைய நிதி ஒன்று உருவாக்கப்பட்டது. அதிலிருந்து கிடைக்கப்பெறும் வட்டித் தொகையிலிருந்து ஓய்வு பெறும் திருக்கோயில் பணியாளர்களுக்கு, மாதம் ஒன்றுக்கு ரூ.800/– வீதம் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

137. 2012–2013–ஆம் நிதியாண்டில் 375 ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு இத்திட்டத்தின் வழி ஓய்வூதியம் பெற அனுமதிக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் மொத்தம் 3183 பணியாளர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

138. **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணையின்படி 1996–க்கு முன்னர் திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்களுக்கும் இத்துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் சுமார் 100 ஓய்வு பெற்ற பணியாளர்கள் பயன்பெறுகின்றனர்.

**திருக்கோயில் பணியாளரின் பிள்ளைகளுக்கு படிப்புதவித் திட்டம்**

**139.** அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் கல்வி நிறுவனங்களில் தொழில் சார்ந்த பட்டப்படிப்பு (Professional Courses) பயிலும் திருக்கோயில் பணியாளர்களின் மகன் அல்லது மகளுக்கு முதல் ஆண்டு கல்விக் கட்டணத்தில் 25 சதவிகிதத் தொகை நிதியுதவியாக வழங்கப்படுகிறது.

**கிராமக்கோவில்கள் பூசாரிகள் நல வாரியம்**

**140.** இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத, கிராமத் திருக்கோயில்களில் பூஜை செய்யும் பூசாரிகளுக்கு கிராமக்கோயில் பூசாரிகள் நல வாரியம் மூலமாக பின்வரும் உதவிகள் வழங்கப்படுகின்றன.

| நலத்திட்ட உதவிகள் | | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | மூக்குக் கண்ணாடி வாங்குவதற்கு | 500/– |
| 2. | பூசாரியின் மனைவி(அ) மகளின் மகப்பேறு– கருச்சிதைவு போன்றவற்றுக்கு | 6000/– |
| 3. | பூசாரியின் குழந்தைகளின் உயர் கல்விக்கு | 1000/– – 6000/– |
| 4. | பூசாரியின் திருமணத்திற்கு | 3000/– |
| 5. | பூசாரியின் மகனின் திருமணத்திற்கு | 3000/– |
| 6. | பூசாரியின் மகளின் திருமணத்திற்கு | 5000/– |

| | | |
|---|---|---|
| **7.** | உறுப்பினர் மரணமடைந்தால் அவரது இறுதிச் சடங்கிற்கு | **2000/–** |
| **8.** | அவரது வாரிசுதாரருக்கு நிதியுதவி | **15,000/–** |

**நிறைவுரை**

**141. “எய்தற் கரியது இயைந்தக்கால் அந்நிலையே**

**செய்தற் கரிய செயல்”**

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கு இலக்கணமாய் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களது பொற்காலத்தில்,

- சமயத்தைச் சமூக நலத்தோடு இணைக்கும் உயரிய நோக்கோடு, **518** ஆலயங்களில் அன்னதானம், அதுவும் ஸ்ரீரங்கம் மற்றும் பழனியில் நாள் முழுவதும் அன்னதானம்
- உயிர் இரக்கம் பேணும் உயரிய நோக்கில், காட்சிப் பொருளாக நின்ற யானைகளை ஓரிடத்தில் கூட்டி, அவை நலம் பேணும் புத்தொளிப் பயிற்சி முகாம்
- திருப்பணிகள் காணாது, நலிவுற்றுச் சிதைந்த நிலையில் உள்ள ஆயிரம் ஆயிரம் ஆலயங்களில் திருப்பணிகள் நிறைவேற்றி, நூற்றுக்கணக்கான குடமுழுக்கு விழாக்களை நிகழ்த்தி ஆன்மிகப் பெருமக்களை அகம் மகிழ்வித்தல்
- ‘அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை’ என்று வள்ளுவர் நெறியில் தலை நிற்கும் எம் துறை, பொருளாதார வளமின்மையால் மணம்

காண முடியாது தவித்து நிற்கும் ஆயிரம் ஆயிரம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தாய்வீட்டுச் சீதனம் போல் அனைத்துச் சீர்களும் கொடுத்து ஒரே நாளில் ஒரே மேடையில் **1006** திருமணங்களை நிகழ்த்தி ஏழைகள் நெஞ்சில் பால் வார்த்தல்

- வேதம், சிவாகமம், திருமுறைகள், தமிழிசை கற்பிக்கும் பாடசாலைகள் மற்றும் பள்ளிகள்
- ஆன்மிகத்தை அறிவுத் தடத்தில் எடுத்துச் செல்ல நல்லறிஞர்களைக் கொண்டு அறநெறிச் சொற்பொழிவுகளை நிகழ்த்துவித்தல்.
- சிவாச்சாரியார், பட்டாச்சாரியார், கிராமக்கோயில் பூசாரிகள் உரிய நெறி வழுவாது பூசனைகள் செய்ய அன்னாருக்குப் பயிற்சியளித்தல்.

சிறப்பாகக் கூற வேண்டுமானால்

142. ‘‘ எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல்
வேறு ஒன்றும் அறியேன் பராபரமே’’

என்ற அருளாளர் தாயுமானவர் விருப்பத்திற்கு ஓர் செயல் வடிவம் கொடுத்து **தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் வழியில் நிமிர்ந்து நிற்கிறது தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை என்பதை அடக்கத்துடன் தெரிவித்து மகிழ்கிறோம்.

**எம்.எஸ்.எம். ஆனந்தன்**

**இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்**